


கீர்த்தித் திருவகவல்
கே. வி. குணசேகரம்
கலைமகள்


கீர்த்தித் திருவகவல்
கே. வி. குணசேகரம்
கலைமகள்

எனது தந்தை கந்தர் வைத்திலிங்கம். எனது தாயார் எனக்கு 10 வயதில் காலமானதால் அவரது விபரங்கள் கிடைக்கவில்லை.



தந்தையின் தந்தையும், தாயும்.



## என்னுரை

திருவாசகம் இனிமையான பாடல்களைக் கொண்ட ஒரு அருமையான நூல். அதில் ஏராளமான புராணக் கதைகள் கூறப்பட்டுள்ளன. புராணக் கதைகளைப் பலரும் அறிந்திருப்பார்கள். அதைத் திரும்பவும் எழுதுவதில் அர்த்தமில்லை. அக்காலத்தில் வாழ்ந்தவர்கள் சிவபெருமான் அசுரர்களுக்கும், நாயன்மார்களுக்கும் தான் அருள் கொடுப்பாரென்று நினைத்தார்கள். அப்படியல்ல, யார் பற்றற்று சிவன்மீது அன்பு வைக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் சிவன் வரமளிப்பார் என்ற நம்பிக்கையை உண்டுபண்ணுவதே எனது நோக்கம். அதனால் சாதாரண மக்களின் வாழ்வில் நடைபெறும் சாதாரண விடயங்களை எனது இலக்கியத்தில் புகுத்தி வருகிறேன். இன்றைய நிலையைப் பல சம்பவங்களோடு இணைத்துக் கூறியுள்ளேன். சமயநூல்களென்றால் பக்தி, வணங்குதல், பரிகாரம் செய்தல் என்று அறியாமையால் நம்புவோரின் எண்ணங்களை மாற்றுவதே எனது நோக்கம். சிவன் எப்படியானவன். அவனது பெருமைகள் என்ன என்பதை இன்றைய மக்களூடாகத் தெரிவித்துள்ளேன். யாவும் எனது கற்பனையில் உதித்தவை. வாசித்துப் பாருங்கள். விமர்சியுங்கள். விமர்சித்தால் தான் குறைநிறைகள் தெரியும். சிவனை நம்புங்கள். சிவனை நம்பினால் நினைத்தவற்றையெல்லாம் செய்யலாம். அது எனது அநுபவம். கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயத்தில் நான் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் பல இலட்சக்கணக்கான ரூபாவில் பல திட்டங்களை யாரின் உதவியும் இன்றிச் செய்தேன். பாடசாலையைச் சுற்றி மதில் அமைத்தேன். பிள்ளையாருக்கு கோவில் அமைத்தேன். விளையாட்டு மைதானம் வாங்கினேன். நாவலர் சிலை அமைத்தேன். கணனி வசதி செய்தேன். நீர்த்தாங்கி அமைத்தேன். பாடசாலையில் நூறு வருடங்களாகத் தேங்கி நின்ற வெள்ளத்திற்குச் சுமார் 500 ரைக்ரர் லோட் மண் பறித்தேன். இவையெல்லாம் சிவனால் அழைத்து வரப்பட்ட பாடசாலைக்குத் தொடர்பில்லாதவர்களால் நடைபெற்றது. இவை பற்றி எனது கதைகளில் மிக மிக விபரமாக எழுதியுள்ளேன். அதனால் சிவனை நம்பி எந்தத் தொழிலையும் ஆரம்பியுங்கள். **மீண்டும் ஒரு திருவாசகத்துடன் சந்திப்போம்.**

நன்றி.

***கே. வி. குணசேகரம்***

உ

சிவமயம்

## தில்லையில் அருளிய

# கீர்த்தித் திருவகவல்

## சிவனது திருவருட் புகழ்ச்சி முறைமை

**1) தில்லை மூதூர் ஆடிய திருவடி**

**2) பல் உயிர் எல்லாம் பயின்றனன் ஆகி**

திருத்தில்லைநகர் அகில அண்டங்களுக்கும் என்றும் ஆதாரமாக இருக்கிறது. அதனால் அதை மூதூர் எனப் பெருமையாக அழைக்கப்படுகிறது. குணம் குறியற்ற பரமனான சிவன் உயிர்கள் அனைத்தின் உள்ளத்திலும் சர்வகாலமும் இனிமையாக வீற்றிருக்கிறார். இதை உணராதவர்கள் தான் அறியாமையால் மனதில் எழுந்தவற்றையெல்லாம் பேசுகின்றனர். இவற்றை உணர்ந்தவர்கள் சிவனை நம்புகின்றனர். அத்துடன் திருவாவடுதுறைக்குச் சென்று தன்னுள்ளும் சகல உயிர்களுள்ளும் வீற்றிருந்து அருளுகின்ற நடராசனைத் தரிசிக்க விரும்புகின்றனர். நான் இவ்வளவு காலமும் என்னுள்ளும் சகல உயிர்களுக்குள்ளும் மகிழ்வுடன் வீற்றிருந்து அருளையும், இன்பத்தையும் அள்ளித்தருகின்ற எம்பெருமானான நடராசனைப் பின்பற்றி வணங்கினேனே தவிரத் திருவாவடுதுறைக்குச் சென்று அவனைப் பார்த்து ரசித்து வணங்க வேண்டும் என்று நினைக்கவில்லை. உனக்கு அந்த நினைவு வந்ததோடு என்னையும் அழைத்துச் செல்ல விரும்புகிறாய். அது நான் செய்த பாக்கியம். இறக்குமுன் தில்லையில் ஆடும் நடராசனைத் தரிசித்தால் இன்பம் பெருகும் என்பார்கள். அதனால் நான் உன்னைப் போற்றுகிறேன்'' என்று கதிரேசன் சொல்ல மகாலிங்கம் திகைத்துப் போனார்.

**3) எண் இல் பல்குணம் எழில் பெறவிளங்கி**

**4) மண்ணும் விண்டும் வானோர் உலகும்**

''மகாலிங்கம், சிவன் மண்ணுலகம், விண்ணுலகம், தேவர்களின் உலகம் ஆகிய எல்லாவற்றையும் கணக்கிட முடியாத குணபேதங்களோடு படைத்துள்ளான். அவனது படைப்புக்கள் ஒவ்வொரு வகையிலும் ஒவ்வொரு அழகையுடையன. குணபேதம் என்று சொல்லும்போது நற்குணமும், தீயகுணங்களும் அடங்கும். சிலரால் தீயவை, அழகில்லாதவை என்று

ஒதுக்கப்படுபவைகூடச் சிலரது கண்களுக்கு நல்லவையாகவும், அழகுள்ளவையாகவும் தென்படும். அதற்கேற்றபடி தான் சிவன் உயிர்களையும், பொருட்களையும் படைக்கின்றான். அழகில் அழகில்லாதவையும் சேர்ந்து இருக்கிறது. அழகில்லாதவற்றில் அழகும் சேர்ந்திருக்கின்றது. அழகுள்ளவை அழகற்றவை என்று சொல்வதெல்லாம் மனப் பிரேமையே தவிர உண்மையல்ல''

கந்தசாமி தனது நண்பரான நமசிவாயகத்திற்குத் தனது மூத்த மகனுக்கு அவரது மகளைத் திருமணம் செய்து கொடுக்க விரும்பினார். அதை நமசிவாயகத்தின் மகள் அபிராமியும் அறிந்திருந்தாள். ஆனால் கந்தசாமியின் மூத்தமகன் இன்னொரு பெண்ணை விரும்பியிருந்ததால் அவனைத் திருமணம் செய்ய விரும்பாது அவனது தம்பியைத் திருமணம் செய்யச் சம்மதித்தாள். கந்தசாமியின் இரண்டாவது மகன் அழகில்லாதவன். அபிராமி பேரழகி. அதனால்தான் அவன் அவளை விரும்பினான். கந்தசாமி மிகுந்த மனவருத்தத்துடன் அபிராமியோடு கதைத்தபோது அவள் சொன்னாள்; ''மாமா, இறைவனின் படைப்பில் அழகற்றவை எவையுமில்லை. ஒருவருக்கு அழகாகத் தெரிவது இன்னொருவருக்கு அவலட்சணமாகத் தெரியும். இது சிவனின் படைப்பின் இரகசியம். அழகு என்று சொல்லி ஒரு பெண்ணை பத்துப்பேர் விரும்பிச் சண்டையிடக் கூடாது என்று நினைத்துத்தான் குணபேதங்களையும், அழகையும், அழகில்லாதவற்றையும் சிவன் படைத்தான். அழகில்லாதவை என எதுவும் புறக்கணிக்கப்படுவதில்லை. சாதாரணமாக ஒரு சேலையை நான் பார்த்துவிட்டுப் பிடிக்கவில்லையென்று விட்டால் அச் சேலை விலைப்படாமலா இருக்கும். அச்சேலை இன்னொருவருக்கு அழகாக இருக்கும்'' என்றவர். ''அவள் சிவபக்தை என்பதால் சிவன் அவளின் உள்ளே நின்று அதை உணர்த்தியுள்ளார். இவையும் சிவனின் கிருபைதான்'' என்றார் கதிரேசன்.

### 5) துன்னிய கல்வி தோற்றியும் அழித்தும்

### 6) என்னுடை இருளை ஏறத் துரத்தும்

கதிரேசனது வீட்டுக்கு வந்த பண்டிதர் பரந்தாமன், கதிரேசன் சிவபூசை செய்து, கொண்டிருந்தமையால் முற்றத்தில் நின்ற வேப்பரநிழலில் போடப்பட்டிருந்த நாற்காலி ஒன்றில் அமர்ந்தார். தன்னைச் சந்திக்க வருபவர்கள் பொழுதை வீணாகக் கழிக்கக்கூடாதென்பதற்காகப் பல நூல்களை அங்கிருந்த அலுமாரி ஒன்றில் வைத்திருந்தார். புத்தகங்களை ஒருவர் அமைதியாக இருந்து வாசிக்கத்தக்க சூழ்நிலை அங்கு எப்போதும் இருக்கும். பண்டிதர் ஆசாரக்கோவை என்ற நூலை எடுத்து வாசித்துக் கொண்டிருந்தார். கதிரேசனின்

வேலையாள் பண்டிதருக்கு மோர் கொண்டு வந்து கொடுத்தான். அப்போது கதிரேசன் அங்கே வந்தார். பண்டிதர் எழுந்து கதிரேசனை வணங்கிவிட்டுச் சொன்னார்; ‘‘ஐயா, சிவனது திருவிளையாடலின்போது அவ்வவ் வேளைகளுக்குத் தேவையானவை தோன்றுகின்றன, சில மறைகின்றன. மறைகின்றன என்றபோது அவை அழியவில்லை. தேடுவாரற்று மறைந்திருக்கின்றன. இவற்றிற்கு உதாரணமாகப் பழந்தமிழ் நூல்களையும், சமய நூல்களையும் கூறலாம். நம்பியாண்டார் நம்பி மறைந்திருந்த தேவாரப்பதிகங்களைச் சேகரித்து அவற்றை வரிசைப்படுத்தியதுபோல எமது ஊரவரான பண்டிதர் மகேஸ்வரன் பழந்தமிழ் நூல்களைத் தேடி எடுத்து அவற்றை விளக்கக் கதைகள் எழுதப் போவதாகச் சொல்கிறார். அதற்கு எமது உதவி தேவை என்று சொல்கிறார்’’ என்றார்.

மிகவும் நல்லது. அவை செய்யுள்களாக இருப்பதால் அவற்றை சாதாரண மக்களால் படித்துப் புரிந்து கொள்ள முடிவதில்லை. சிவன் காலத்திற்குக்காலம் தேவையானவர்களை அழைத்து அவற்றை உபதேசித்து மக்களுக்கு அறிவுறுத்துமாறு கூறியதாக எமது முன்னைய வரலாறு கூறுகிறது. ஈசனது திருவிளையாடல் அது. அதனால் கலைஞானங்கள் தோன்றவும், மறையவும் செய்கின்றன. அதனால் எம்போன்றவர்களின் அறியாமை நாளடைவில் முழுமையாக நீங்கும். அதுதான் இறைவனது மாறாத விருப்பமாகும். இப்போது சமய சேவை செய்வோர் கோவில்களைக் கட்டவும், விரிவாக்கம் செய்யவுமே விரும்புகிறார்கள். திருமூலரது காலத்தில் ஒரு கோடி சிவன்கோவில்கள் இருந்தனவென்றும், அங்கு சென்று முறைப்படி வழிபடும்படி கூறுகிறார். ஆடம்பரங்கள், அலங்காரங்கள் செய்வதைவிட்டுக் கோவில் தொண்டுகள் செய்தல் வேண்டும். திருமுறைகளைப் பாடும்போது பொருளை உணர்ந்து பாட வேண்டும். அதைப் பண்டிதர் மகேஸ்வரன் செய்கிறார். முன்னைய தமிழ் செய்யுள்கள் விளங்காதவை. அவற்றிற்கு உரை எழுதுவோர் முன்பு எழுதிய உரையைச் சிறிது மாற்றி எழுதுகின்றார்கள். பண்டிதர் மகேஸ்வரன் திருவருட்பயனுக்கு எழுதிய கதைகள் மிகவும் பொருத்தமானவை. சிவன் காலத்தின் தேவையை அறிந்து அவரை அழைத்துக் கதைகளைக் கூறுகிறார். அதை அவர் எழுதுகிறார். இது காலத்தின் தேவை மட்டுமல்ல சிவசேவையுமாகும். அதனை நாம் வரவேற்க வேண்டும்” என்றார் கதிரேசன்.

“கலைகள் அறுபத்து நான்கு என்று ஏற்கனவே கூறப்பட்டுள்ளது. ஆனால் அதற்குமேல் எத்தனையோ இருக்கின்றன. காலத்திற்கேற்பச் கலைஞானமும் மாற்றமடைய வேண்டும். சமய தத்துவங்கள் விளங்காதவை. விளக்கிக் கூறினாலும் புரிந்து கொள்ள முடியாதவை. அந்நிலையில் அவற்றைக் கதைகளாக எழுதிப் பாமர மக்களுக்கு விளங்கவைப்பது ஒரு புதியகலை;

அதனால் பாமரர் சிவஞானத்தை உணரமுடியும். நூல்கள் மூலம் சிவஞானத்தைப் பெற்று சிவனடியை அடையும் முறை சிவனின் அருளால் எக்காலத்திலும் ஒரே மாதிரி நிகழ்ந்து வருகிறது" என்றார் பண்டிதர் பரந்தாமன்.

**7) அடியார் உள்ளத்து அன்பு மீதூரத்**

**8) குடியாய்க் கொண்ட கொள்கையும் சிறப்பும்**

"அடியவர்களின் உள்ளத்தில் பக்தி என்ற அன்பு பெருக்கெடுத்து ஓடினால், அதில் சிவன்கோவில் கொண்டு தங்கி விடுவான். அதுதான் சைவசமயத்தின் கோட்பாடு. இறைவனது சன்னியத்தை அங்கு காண முடியும்." என்று பண்டிதர் கூறிக் கொண்டிருக்கும்போது பண்டிதர் மகேஸ்வரன் அங்கு வந்தார். அவருடன் சில மாணவர்களும் வந்தனர்.

"வாருங்கள் பண்டிதரே, உம்மைப் பற்றித்தான் பண்டிதர் பரந்தாமன் சொல்லிக் கொண்டிருந்தார். ஒரு மொழி காலத்திற்குக் காலம் மாறிக்கொண்டிருக்கிறது. முன்பு செய்யுள்கள் வாயிலாகத் தமிழ் தழைத்தது. பின் உரைநடை வந்தது. செய்யுள்களைப் புரிந்து கொள்ளாமையால்தான் உரைநடைகளை உருவாக்கினார். அதுவும் புரியாதநிலை ஏற்பட்டுவிட்டது. சங்ககாலத்திலும், பின்வந்த காலங்களிலும் கதைகள் செய்யுள்களால் சொல்லப்பட்டன. பின் கதைகள் சொற்களால் சொல்லப்பட்டன. ஒரு தத்துவத்தை விளக்கச் சொற்களால் கதையைக் கூறினால் அதைச் சிறுவர்களும் விளங்கிக் கொள்வர். அதற்காகத் தான் நான் தத்துவங்களைக் கதையாக ஆக்கி வருகிறேன். அதற்கு உங்கள் உதவி தேவை. பெரிய அறிஞர்கள், மேதாவிகள் என்று மக்களால் மதிக்கப்படுபவர்கள் இதை விரும்பவில்லை. அதனால் தான் உங்களிடம் வந்தேன். இவற்றை வாசித்து இதிலுள்ள குறைநிறைகளைச் சொல்லுங்கள். அவற்றைச் சீர்செய்ய உங்கள் ஆலோசனைகள் உதவும்" என்றார் பண்டிதர் மகேஸ்வரன்.

"தாவரங்கள், மிருகங்கள் கூடச் சூழ்நிலைக்கேற்ப தம்மை மாற்றி வாழும்போது மனிதர்கள் மட்டும் மாறமாட்டோம் என்று அடம்பிடிப்பது அவர்களது அறியாமையைக் காட்டுகின்றது. நீங்கள் தைரியமாக எழுதுங்கள். இளம் சமுதாயம் அதைக் கட்டாயம் ஏற்கும்" என்றார் கதிரேசன்.

**9) மன்னும் மாமலை மகேந்திரம் அதனில்**

**10) சொன்ன ஆகமம் தோற்றுவித்தருளியும்**

‘‘சைவசித்தாந்தம் என்பது சிவனது உபதேசங்களாகும். திருவருட்பயனை நந்திக்கு உபதேசித்து மெய்கண்டதேவருக்கு உபதேசிக்கச் சொன்னவர். சிவனின் கட்டளைப்படி மெய்கண்டதேவர் தனது மாணவர்களுக்கு அதை உபதேசித்துச் சகல மக்களும் பயன்பெற நூலாக்கியவர். என்றும் அழியாது நிலைத்திருக்கும் மந்திரமலையில் வைத்து சிவன் சிவைக்கு உணர்த்தியருளினார். அப்போது அம்பிகை நிகமத்தைத் தனது கணவனான சிவனுக்கு எடுத்து விளக்கினாள் என்று புராணங்கள் கூறுகின்றன. அதுபோலச் சிவன் திருமந்திரத்தைத் திருமூலருக்கு உபதேசித்தபின் அதை நூலாக எழுதுமாறு பணித்தார். அதன்படி திருமூலர் மூவாயிரம் பாடல்களைக் கொண்ட நூலைத் திருவாவடுதுறையில் இருந்து பாடியபின் சிதம்பரத்தில் நந்தியெம்பெருமானின் அடியில் வைக்கத் திருஞானசம்பந்தர் அதைக் கண்டெழுந்தவர். அதுபோலச் சுந்தரருக்குச் சிவபெருமான்; ‘பித்தா’ என்று பாடு என்று அடியெடுத்துக் கொடுத்தவர். இப்போது எனக்குச் சைவசமயத் தத்துவங்களைச் சிறுவர்களுக்கு விளக்குமாறு கதைகளாக எழுது என்று கட்டளையிட்டிருக்கிறார். சிலசமயம் நான் எழுதமுடியாமல் தடுமாறும்பொழுது எனக்கு உபதேசித்துக் கதைகளை எழுதுவிக்கிறார். உரிய பக்குவம் அடைந்தவர்களுக்குச் சிவன் எழுத உதவி செய்துள்ளான். அதுபோல எனக்கும் எழுத உதவி செய்கிறான். இதைப் பலர் நம்புவதில்லை. நீங்கள் நம்புவீர்கள் என்று நினைத்துத்தான் சொன்னேன். இது உண்மை. நம்பினால் நம்புங்கள்” என்றார் பண்டிதர் மகேஸ்வரன்.

“ஐயையோ, சந்தேகம் கொள்ளாதீர்கள். நான் நம்புகிறேன். தற்போதைய தேவையை உணர்ந்து தான் சிவன் உங்களுக்கு உபதேசித்துள்ளார். எழுதுங்கள், எழுதுங்கள்” என்றார் கதிரேசன். அதைக் கேட்ட மகேஸ்வரனின் உள்ளம் மகிழ்ந்தது; “எனக்குச் சிவனின் அருள் கிடைத்து விட்டது” என்று மகிழ்ந்தார் பண்டிதர் மகேஸ்வரன்.

**11) கல்லாடத்துக் கலந்து இனிது அருளி**

**12) நல்லா ளோடு நயப்புற எய்தியும்**

‘‘சிவன் எப்போதும் கல்யாணியான அம்பிகையுடன் வீற்றிருப்பான். அம்பிகைக்கு அமைந்த ஆயிரக்கணக்கான திருநாமங்களில் கல்யாணி என்பதுவும் ஒன்று. கல்யாணி என்பது என்றும் நலத்தைச் செய்பவள் எனப் பொருள் கொள்ளப்படுவது. அவளிடமிருந்தே நலன்களை உயிர்கள் பெறுகின்றன. அவள் இயற்கைத் தாய். அதனால் அவளுடன் கூடியிருக்கும் சிவனும்

இன்பமடைகிறான். அப்படியான கல்யாணி கல்லாடம் என்னும் கோவிலில் சிவனுடன் வீற்றிருக்கிறாள். அப்படி இருப்பதனால்தான் உயிர்கள் இன்பமடைகின்றன. நானும் மனைவியும் தமிழ்நாட்டிற்குச் சென்றபோது கல்யாணியுடன் சேர்ந்து வீற்றிருந்த சிவனைத் தரிசித்தேன். அங்கிருந்த சித்தர் ஒருவர் சொன்னார்; "உங்களைப் பார்த்தால் வேறு நாட்டில் இருந்து வந்தவர்களைப் போலிருக்கிறீர்கள். கல்யாணியுடன் கல்லாடம் என்ற இக்கோவிலில் வீற்றிருக்கும் சிவன் மங்களமானவன். தன்னை வணங்கும் அடியவர்களுக்கு எல்லையில்லாத மகிழ்வினைக் கொடுப்பவன். அதனால் மிக முக்கியமானதென்று கருதுவதைக் கேளுங்கள். அவன் தருவான்" என்றார். அப்போது நான் திருமந்திரப் பாடல்களுக்குக் கதை எழுதும் அருளைத்தா என்று இரந்து வேண்டினேன். அவன் தந்தமையால் கதைகளை எழுதி முடித்துவிட்டேன்" என்றார் பண்டிதர் மகேஸ்வரன்.

**13) பஞ்சப் பள்ளியிற் பான்மொழி தன்னொடு**

**14) எஞ்சாது ஈண்டும் இன் அருள் விளைத்தும்**

"அன்பனே, உன்னைப் பார்த்தால் பெரும் சிவபக்தனைப்போல எனக்குத் தெரிகிறாய். அதனால் தான் கல்லாடம் எனும் தலத்தில் வீற்றிருக்கும் சிவனைப் பற்றியும், அம்பிகையைப் பற்றியும் சொன்னேன். அவர்களின் கிருபை உனக்கு நிட்சயமாகக் கிடைக்கும். இனிப் பஞ்சப்பள்ளி என்னும் சிவத்தலத்தில் சிவசக்தியுடன் வீற்றிருக்கும் சிவன் அருளை அள்ளித்தருபவன். அவனின் அருள்கொடைக்கு அளவேயில்லை. நீ சிவசேவையைப் பற்றித்தான் சிவனிடம் கேட்டதாகச் சொன்னாய். சிவனின் அருளைப் பற்றியும், அவனை வணங்கும் முறைகள் பற்றியும் சைவசித்தாந்த நூல்கள் கூறுவதை மக்களுக்கு விளங்கும் மொழியில் கூறு. பழையகாலப் புலவர்கள் தமது வித்துவத்தன்மையைக் காட்டவே மொழியை ஒரு கருவியாகப் பயன்படுத்தினர். இப்போதும் பலர் அதைத்தான் செய்கின்றனர். பாமர மக்களைச் சென்றடையாத எந்த இலக்கியமும் நெடுநாட்கள் வாழ மாட்டாது. அதற்கு உதாரணம் இராமாயணமும் பாரதமும். நீ இலகுவான மொழிநடையில் விளங்கக் கூடியதாக எழுது. உனது படைப்பின் பயன் அது தான்" என்றவர். அதன்பின் நான் பஞ்சப் பள்ளி என்ற சிவத்தலத்திற்குச் சென்று சிவனையும் அம்பிகையையும் வணங்கினேன். அங்கு பல சிவனடியார்கள் நிரந்தரமாகக் குடியிருக்கின்றனர். ஒரு சிவனடியார் வந்து என்னையும் மனைவியையும் மடத்திற்கு அழைத்துச் சென்று உணவு பெற்றுத் தந்துவிட்டுச் சொன்னார்; "இங்கிருந்து தான் சிவனுக்குப் படைக்கப்படும் பிரசாதங்கள் சமைக்கப்படுகின்றன. சிவனுக்குப் படைத்த பின் கோவிலில் உள்ள

அடியவர்களுக்குக் கொடுக்கப்படும் மடத்தில் யாருக்கும் உணவு கொடுப்பதில்லை. உமக்குக் கொடுக்க வேண்டும் என்ற நினைவு எனக்குண்டானது. இப்படியான நினைவு எனக்கு இதுவரை வந்ததில்லை. நீர் சிவனின் அருளைப் பெற்றவர். ஊருக்குச் சென்று உம்மால் முடிந்தளவு சிவ சேவை செய்யும். நேரம் கிடைக்கும் போதெல்லாம் பஞ்சப்பள்ளிக்கு வாரும். உம்மைக் காண நான் மிகவும் ஆவலாக இருப்பேன் என்றார். இரண்டு நாட்கள் தங்கியிருந்தேன். அதன் பின் அவரை நான் காணவில்லை"

"சிவன் தான் அச் சிவனடியாரின் உருவில் வந்து உம்மைச் சந்தித்திருக்கிறார். நீர் பாக்கியசாலி. அதனால் உமது சேவையைப் பயமின்றித் தொடரும்" என்றார் கதிரேசன்.

**15) கிராத வேடமொடு கிஞ்சுக வாயவள்**

**16) விராவு கொங்கை நல்தடம் படித்தும்**

''ஐயா கேட்கிறேன் என்று குறை நினைக்காதீர்கள். எனக்குச் சிவனைப் பற்றி எதுவும் தெரியாது. சிவன் சிவனடியான் வேடத்தில் வந்து மகேஸ்வரன் ஐயாவை அழைத்ததை என்னால் நம்பமுடியவில்லை" என்றான் சிவகுரு.

பண்டிதர் பரந்தாமன் சொன்னார்; "முருக்கம் பூப் போன்ற இதழ்களை உடையவரும், அழகான மார்பகங்களைக் கொண்டவருமான உமாதேவியுடன் எவ்வேளையிலும் கூடியிருக்கும் சிவன் தனது அடியவர்களுக்காக எவ்வேடமும் எடுப்பான். எதையும் செய்வான். தனது பக்தனான அர்ச்சுனனுக்கு அருள் செய்து பாசுபதம் என்ற அரிய ஆயுதத்தை வழங்குவதற்காகச் சிவன் வேடனாக வந்து, அர்ச்சுனனை வலிய வம்புக்கிழுத்து அவமானப்படுத்தி அவனோடு போர் செய்தவர். இறுதியில் தன்னை வெளிப்படுத்தி பாசுபதம் என்ற சக்தி வாய்ந்த ஆயுதத்தை கொடுத்தவர். இப்படிப் பல திருவிளையாடல்களைத் தனது பக்தர்களுக்காகச் செய்தவர். அவர் பக்தியின் தன்மையை மட்டும் தான் பார்ப்பாரே தவிர வேறெதையும் பார்க்கமாட்டார். எல்லா உயிர்களுக்கும் அவர் தாயானவர் என்பதால் தான் பன்றிக் குட்டிகளுக்கு அவர் பால் கொடுத்தவர்"

"ஐயா, இவையெல்லாம் எனக்குத் தெரியாது. சிவனைச் சிவனடியாரின் வேடத்தில் கண்ட மகேஸ்வரன் ஐயாவும் சிவன் தான்" என்று சொன்ன சிவகுரு

மகேஸ்வரனின் பாதங்களைப் பணிந்தான். அதை எதிர்பாராத மகேஸ்வரன் பதை பதைத்துப் போனார்.

**17) கேவேடர் ஆவி கெளிது அது படுத்தும்**

**18) மாவேட்டு ஆகிய ஆகமம் வாங்கியும்**

''சிவகுரு, சிவன் மக்களுக்குத் துன்பங்கள் வரும்போது அதை நீக்குவதற்காகப் பல வேடமிட்டுச் சென்று அவர்களின் துயரை நீக்கியவர். ஒருமுறை மிகப் பெரிய மீன் ஒன்று கடலில் மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களை மீன்களைப் பிடிக்க முடியாது துன்பப்படுத்தியது. அவர்கள் வீசும் வலைகளை அறுத்தது. படகுகளைக் கவிழ்த்துப் பலரைக் கடித்தது. அரசன் தன்னால் முயன்றவரை அம் மீனைக் கொல்ல முயன்றான். முடியவில்லை. அதனால் மிக்க கோபங் கொண்ட அந்த மீன் கடலுட் செல்வோரை மிகவும் கொடுமையாகத் தாக்கியது. மன்னனும் மக்களும் செய்வதறியாது திகைத்தனர். தொழில் செய்ய முடியாமையால் மீனவ மக்கள் பெரும் துன்பமுற்றுச் சிவபெருமானிடம் முறையிட்டனர். அடியார்கள் மீது அன்பும், கருணையும் கொண்ட சிவபெருமான் மீனவ வேடந்தாங்கி கொடுமைகள் செய்த அந்த மீனைக் கொன்றவர். அத்துடன் அந்தக் கொடிய மீன் விழுங்கிய ஆகம நூல்களை மீட்டெடுத்தவர். இல்லாவிட்டால் திருமூலர் எழுதிய ஆகமங்கள் எமக்குக் கிடைத்திருக்காது" என்றார் பண்டிதர் பரந்தாமன்.

**19) மற்று அவை தம்மை மகேந்திரத்து இருத்து**

**20) உற்ற ஐம்முகங்களால் பணித் தருளியும்**

''பண்டிதர் பரந்தாமன் அதைச் சொல்லச் சிவகுரு திகைத்துப் போனான். சிவபெருமான் பக்தர்களுக்காக எதையும் செய்வார் என்று கேள்விப்பட்ட பின்பு அவனது மனதில் இனம் புரியாத ஓர் அதிசய உணர்வு ஊறியது. அதைப் புரிந்து கொண்ட பண்டிதர் பரந்தாமன் சொன்னார்; "சிவகுரு, சிவன் அன்பு மயமானவன். அதனால் திருமூலர் அன்பே சிவம் என்று சொன்னார். அந்த அன்பை எதன்மீது வைத்தாலும் அது சிவனைச் சென்று அடையும். அதனால் தான் சிவன் அம்மையுடன் பிரிப்பின்றிக் கலந்திருக்கிறார். ஒரு மனிதன் சகல உயிர்கள் மீதும் அன்பு கொள்ள வேண்டும். முக்கியமாக அவன் தனது மனைவிமீது அன்பு கொள்ளல் வேண்டும். அவ்வன்பு சிவனைச் சென்றடைய அவன் இல்லறத்தை நல்லறமாக்குவான். இதைத் தெரியாதவர்கள் தான் மனைவிமாரைக் கொடுமைப்படுத்துகின்றனர். ஆகமங்களைக் கொடிய மீனின்

வயிற்றில் இருந்து எடுத்த சிவபெருமான் அவற்றைக் கொண்டு மகேந்திரமலையில் எழுந்தருளி இருந்து தனது ஐந்து முகங்களாலும் உபதேசித்து அருளுகிறார். அவரை நீ ஒருமுறை நினைத்தால் பலமுறை உன்னைத்தேடி வந்து அருள்வார். இவையெல்லாம் புராணங்களில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. உன் போன்ற எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு மெய்யடியார்கள் கோவில்களிலும், மடங்களிலும் விளக்கமாகக் கூறுகின்றனர். மக்கள் அங்கு விரும்பிச்சென்று பயனடைய வேண்டும். என்னைப் பொறுத்தவரை சிவன் அவ்வப்போது வந்து அருளிச் செய்கிறான். இதை வெளியே சொன்னால், சிவனடியார்களைத் தவிர வேறு எவரும் நம்பமாட்டார்கள். நீ சிவனடியான் என்பதால் சொன்னேன். அத்துடன் நீ அறியவும் விரும்புகிறாய். அறிய விரும்புவனுக்கு அறிவிக்காவிட்டால் "பாவம் வந்து சேரும்" என்றார்.

**21) நந்தம்பாடியில் நான்மறையோன் ஆய்**

**22) அந்தம் இல் ஆரியன் ஆய் அமர்ந்தருளியும்**

''சிவகுரு, எங்காவது துன்பம் நேர்ந்தாலோ அல்லது தத்துவங்களை உணர்த்த வேண்டிய தேவை ஏற்பட்டாலோ சிவன் அங்கு சென்று அவர்களுக்கு உதவுவான். எனது மகனுக்கு இருதயநோய் வந்தபோது உள்நாட்டு வைத்தியர்கள் வெளிநாட்டிற்குக் கொண்டு சென்று சிகிச்சை செய்யும்படி கூறினார்கள். என்னிடம் அவ்வளவு பணம் இல்லை. சிவனிடம் முறையிட்டேன். அப்போது வெளிநாட்டிலிருந்து ஒரு வைத்தியக்குழு இங்கு வந்தது. அப்போது பெரும் போர் நடைபெற்றதால்தான் அக்குழு வந்தது. அக்குழுவில் வந்த வைத்தியர்கள் ஒருசதம்கூட வாங்காது சிகிச்சை அளித்தனர். அதனால் எனது மகனின் நோய் முற்றாகக் குணமாகிவிட்டது. வந்தவர்கள் சிவனும் அவரது பரிவாரங்களும் என்றுதான் நான் நினைக்கின்றேன்" என்று உணர்ச்சி வசப்பட்டுச் சில கணங்கள் மௌனமாக இருந்த பரந்தாமன் சொன்னார்; "இது அதிசயமல்ல சிவனடியார்களுக்கு ஏற்படும் சாதாரண நிகழ்வு. ஒருமுறை நந்தம்பாடி என்னும் திருத்தலத்திற்குச் சிவன் வேதியனாக வந்து நான்கு வேதங்களையும் ஓதியுணர்த்தினார். நந்தம்பாடியிலுள்ள சிவனடியார்கள் தமக்கு வேதங்களைக் கற்பிக்க ஒரு ஞானகுரு தேவை என்று சிவனிடம் விண்ணப்பிக்கச் சிவன் அந்தண வடிவமெடுத்துக் குருவாக வந்து உபதேசித்தான். பக்குவமடைந்த சிவனடியார்களுக்குச் சிவன் குருவாக வந்து அவர்களை ஆட்கொண்டு சென்று தனது திருவடிநிழலில் வைத்திருப்பான் என்று சைவசித்தாந்தம் கூறுகிறது. இது உண்மை என்று நம்புகின்றவர்கள் பயனடைவர். நம்பாதவர்கள் மீண்டும் மீண்டும் பிறப்பெடுத்துத் துன்பப்படுவர்" என்றார் பண்டிதர் பரந்தாமன்.

**23) வேறு வேறு உருவும் வேறு வேறு இயற்கையும்**

**24) நூறு நூறு ஆயிரம் இயல்பினது ஆகி**

‘‘அன்று சிவராத்திரி தினம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஆச்சிரமத்தில் பல்வேறு நிகழ்வுகளை நடத்தவிருந்தார். கதிரேசன், நல்லைநாதன், ரவீந்திரன் போன்ற பல பிரமுகர்கள் அங்கு வந்திருந்தனர். சிவகுருவும் மகாலிங்கமும் ஆச்சிரமத்தைத் துப்பரவு செய்திருந்தனர்.

சுவாமியார் ஆரம்ப உரையை நிகழ்த்தினார். அவர் முதலில் ஐந்தெழுத்தை ஓத அடியார்களும் ஓதினர், “சிவனடியார்களே, இன்று சிவன் சோதிப் பிழம்பாகத் தோன்றியதால் இந்நாளை மக்கள் புனிதமாகக் கொண்டாடுகின்றனர். இந்தப் பிரபஞ்சம் வேறு சிவன் வேறல்ல. சிவன்தான் உலகாகக் காட்சியளிக்கின்றான். அதுபோல உலகம் சிவனாக மிளிர்கிறது. பஞ்ச இந்திரியங்கள் மூலம் அதை உணரும்போது அது பிரபஞ்சம் எனப்படுகிறது. ஞானக் கண்ணால் காணும்போது அது சிவனாகத் தோன்றும். அதனால் அது இரண்டல்ல ஒன்று. எண்ணிக்கையில் அடக்க முடியாத உருவங்களையும், அதுபோல எண்ணிக்கையில் அடங்காத இயல்புகளையும் உடைய இயற்கைப் பொருளான சிவன் அடியவர்களுக்கு எளியவன் என்றும் இல்லாத இன்பத்தை அளிப்பவன். பற்றற்று முழு நம்பிக்கையுடன் வணங்குபவர்களின் எண்ணத்தில் தோன்றுபவன். உலகில் உள்ள பொருட்களிலும், உயிர்களிலும் அவன் கோவில் கொண்டிருப்பதால் அவன் எண்ணிக்கை இல்லாதவன். ஓர் இரவில் ஆயிரத்திற்கு மேற்பட்ட பாத்திரங்களில் நீரை நிரப்பி வைத்துப் பாருங்கள் எல்லாவற்றிலும் சந்திரனது உருத்தெரியும். அதை எண்ணுக்குள் அடக்க முடியுமா…? அப்படியான சிவன் உருவில் ஒருவன். அதுபோல அவன் இயற்கைப் பொருட்களில் எல்லாம் இருப்பதால் எண்ணில் அடங்காத இயல்புகளையும் உடையவன். கரும்பில் இருந்து இனிக்கிறான். வேப்பம் விதையில் இருந்து கசக்கிறான். இவையெல்லாம் உயிர்களின் இன்பத்திற்காகவே இறைவனான சிவனால் நிகழ்த்தப்படுகிறது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**25) ஏறுநடை ஈசன் இனிப்புவனியை உய்யக்**

**26) கூறு உடை மங்கையும் தானும் வந்தருளிக்**

சுந்தரமூர்த்தி சுவாமிகள் சொன்னார்; “சிவசக்தியின் சொரூபந்தான் இந்த உலகம். காளை வாகனத்தில் பவனி வரும் சிவன் இவ்வுலகை

உய்விப்பதற்காகவே அவன் அம்மையோடு சேர்ந்து மாதொருபாகனாக வீற்றிருக்கின்றான். உதாரணமாக இதைச் சொல்ல வேண்டுமானால் பெரும் சிவபக்தரான கதிரேசனது வாழ்க்கையைப் பற்றிச் சொல்ல வேண்டும். அவரது வாழ்வு பற்றி உங்களுக்குத் தெரியும். இருந்தும் சொல்கிறேன். இந்த உடல் ஆணாலும் பெண்ணாலும் ஆனது. இந்த உடல் ஆண் அல்லது பெண் என்பதற்கு உதாரணம் என்னவென்று எல்லோருக்கும் தெரியும். இந்த உடலில் கூடிய வீதம் பெண்மை இருந்தால் அது பெண். குறைந்த வீதம் பெண்மை இருந்தால் அது ஆண். இரண்டும் சமமாக இருந்தால் அது அலி. இறைவன் ஆணாகவும் பெண்ணாகவும் இருப்பதைப் போலவே உயிர்களும் ஆணாகவும் பெண்ணாகவும் இருக்கின்றன. ஒரு ஆணை மேம்படுத்துபவள் பெண். ஒரு பெண்ணைப் பூரணப்படுத்துபவன் ஆண். இதை உணர்ந்தவர்களின் வாழ்க்கை தான் உண்மையான வாழ்க்கை. இதில் யாரும் பெரியர் சிறியவர் அல்ல. இதை உணர்த்துவதுதான் அர்த்தநாரீஸ்வரத் தோற்றம்; இதை உணர்ந்தவர்கள் வாழ்வில் எந்தத் துன்பத்தைக் கண்டும் அஞ்சமாட்டார்கள். அதுபோல எந்த இன்பத்தைக் கண்டும் மயங்கமாட்டார்கள். இந்நிலைக்காட்பட்டால் வாழ்க்கை இனிக்கும். துன்பத்தைத் தரும் சிவனே இன்பத்தையும் தருகிறான். அதனால் இரண்டையும் சமமாக ஏற்க வேண்டும் என்ற எண்ணம் வந்தால் அக்குடும்பம் சிவகுடும்பமாகிறது. அதை உணர்த்தத்தான் சிவன் மாதொருபாகனாக வீற்றிருக்கிறான். மாது இல்லாது சிவனால் இயங்க முடியாதென்பதால் மாதைச் சக்தி என்றனர். இது சாதாரண மனிதருக்கும் பொருந்தும்" என்றார்.

**27) குதிரையைக் கொண்டு குடநாடு அதன் மிசைக்**

**28) சதுர்படச் சாத்து ஆய் தான் எழுந்தருளியும்**

"சிவனடியார்களே, சிவபெருமான் சிவனடியார்களுக்கு உதவவும், அவர்களை ஆட்கொள்ளவும் பல்வேறு வகையான திருவிளையாடல்களைச் செய்வார். மாணிக்கவாசரைக் கொண்டு திருவாசகம் பாடுவிப்பதற்காக அவர் நரிகளைக் குதிரைகளாக்கி அதன் பாகனாக வந்தவர். பின் குதிரைகள் யாவும் நரிகளாக மாறிய பின் மாணிக்கவாசகரது பக்தியை உலகிற்குக் காட்ட வைகை நதியைப் பெருக்கெடுத்தோடச் செய்தார். மாணிக்கவாசகர் குதிரைகளை வாங்கச் சென்ற வழியிலேயே திருப்பெருந்துறை இருந்தது. அங்கு மாணிக்கவாசகர் வந்ததும் அவரை அருளால் அழைத்து உபதேசித்தவர். அந்த உபதேசத்தைத்-தான் மாணிக்கவாசகர் திருவாசகமாகப் பாடினார். திருவாசகத்திற்கு உருகாதார் வேறு எதற்கும் உருகமாட்டார்கள். வேதங்களின் பிழி சாறாகவும், சைவசித்தாந்த தத்துவங்களின் விளக்கமாகவும் இருப்பது திருவாசகம். திருவாசகத்தைச் சிவன்

விரும்பிக் கேட்பார். திருவாசகத்தை மனமுருகிப் பாடினால் சிவனது உள்ளம் மகிழ்ச்சியால் நிரம்பி வழியும். அதனால் சிவன் கேட்டதைக் கொடுத்து விடுவார். அதனால் திருவாசகத்தைப் பொருளை உணர்ந்து இசையுடன் பாடுங்கள். பொருளை உணர்வது தான் முக்கியமானது. ஓர் எழுத்துத்தான் அதன் பொருளை முற்றாக மாற்றிவிடும். அதனால் பொருளை உணர்ந்து படித்தல் வேண்டும். சிவன் உபதேசித்த சைவ சித்தாந்த தத்துவங்களே திருவாசகமாகும். இறைவன் பொருத்தமான வேளைகளில் பொருத்தமானவர்களை அழைத்து ஆட்கொண்டருள்வார். இப்போது பண்டிதர் மகேஸ்வரனை அழைத்து கதைகளைக் கூறியுள்ளார். அதை அவர் எழுதி வருகிறார். இதைப் பலரும் பரிகசிக்கின்றனர்; சிவ உணர்வுடையோர் அவற்றை ஏற்றுக் கொள்கின்றனர்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**29) வேலம் புத்தூர் விட்டேறு அருளிக்**

**30) கோலம் பொலிவு காட்டிய கொள்கையும்**

"சிவனடியார்களே, சிவபெருமான் அடியர்களுக்காக எதையும் செய்வாரென்று உங்களுக்குத் தெரியும். மீன்பிடித்தவர், யமனைக் காலால் உதைத்தவர், குதிரைப் பாகனாக வந்தவர், இதைவிடத் தனது அடியாரான சுந்தரருக்குக் கல்யாணத் தரகராகப் பணியாற்றியவர். சிவபெருமான் கடவுள் என்று நினைத்து வணங்கினால் அவர் கடவுளாகவே இருப்பார். நண்பன் என்று நினைத்து வணங்கினால் நண்பனாக இருப்பார். தந்தை என நினைத்தால் தந்தையாக இருப்பர். அதைவிட அடியவர் ஒருவரின் விருப்பத்திற்காகக் கால்மாறி நடனம் ஆடினவர். வேலம்புத்தூர் என்ற சிவத்தலத்தில் காளை வாகனத்தை விட்டுவிட்டு அமர்ந்து அருள் செய்கிறார்.

கதிரேசனுக்கு அன்று வீட்டில் பலர் வந்தமையால் அவரால் சிவன் கோவிலுக்குச் செல்ல முடியவில்லை. நேரஞ் சென்று கொண்டிருந்தது. தனது கணவர் மறந்து விட்டாரோ என்ற நினைப்பில் அவரின் அருகில் வந்த அவரின் மனைவி; "இன்று சிவனைத் தரிசிக்கக் கோவிலுக்குச் செல்லவில்லையா?" என்று கேட்டாள். கதிரேசன் விகடமாகவும் கதைப்பார்; "காலையில் பூசை அறையில் சிவனோடு கதைக்க வேண்டியவற்றையெல்லாம் கதைத்து விட்டேன். சிவனுக்கு ஏதாவது கதைக்கத் தோன்றினால் அவர் இங்கு வருவார்" என்று சிரித்தார். கூடியிருந்தவர்களும் சிரித்தனர். சிறிது நேரத்தில் ஒரு முதியவர் கதிரேசனது வீட்டுக்கு வந்து சொன்னார்; "எனக்கு உனது வீட்டுக்கு வரவேண்டும் என்று நெடுநாளாக ஆசை. நீர் அழைக்காததால் வரவில்லை. இன்று அழைத்தீர் வந்துள்ளேன். உணவு கிடைக்குமா?" என்று கேட்டார். கதிரேசன் வெகு

நேரமாகச் சிந்தித்துப் பார்த்தார். வந்தவரை அவர் இதற்கு முன்பு பார்த்ததில்லை; "என்னைத் தெரியவில்லையா….? காலையில் சொன்னதை நினைத்துப் பார்" என்று சொல்லிவிட்டுச் சென்றார். சிவன் பக்தர்களோடு விளையாடுவான். இது அவனது இயல்பு" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**31) தர்ப்பணம் அதனில் சாந்தம் புத்தூர்**

**32) வில்பெரு வேடற்கு ஈந்த விளைவும்**

''சிவனடியார்களே, சிவபெருமான் எல்லா உயிர்களுக்குள்ளும் சரிசமமாக இருக்கிறார். அதனால் சாதிபேதம் இல்லை என்று திருமூலர் கூறுகிறார். எல்லா மனிதர்களும் சமமானவர்கள் என்பதால் தான் அவர் உயிர்களுள்ளே வேறுபாடு காணாது மகிழ்வுடன் இருக்கிறார். சிவனடியார்கள் பணத்தால், சாதியால், பதவி அந்தஸ்தால் வேறுபட்டிருப்பினும் சிவன் அவற்றைக் கவனிப்பதில்லை. உயிர்களைக் கொலை செய்து உண்ணும் வேடர்கள் பலருக்குக்கூட அவர் காட்சி கொடுத்துள்ளார். சைவசமயம் புலால் உண்பதை ஒருபோதும் ஏற்றுக் கொள்வதில்லை. வேடன் காட்டில் வாழ்பவன். அவன் பாடசாலைகளுக்கோ, ஆச்சிரமங்களுக்கோ சென்றதில்லை. அதனால் அவர்கள் அறியாமை மிக்கவர்களாகவே வாழ்ந்து வருகின்றனர். தெரிந்து செய்யும் செயல்கள் தான் வினையைக் கூட்டுகின்றன. பிறப்பை அதிகரிக்கச் செய்கின்றன. தெரியாமல் செய்யும் பாவம் சிவனால் மன்னிக்கப்படும். வேடனான கண்ணப்பன் அந்த நிலையில் தான் வாழ்ந்து வந்தான். அதனால் தான் அவன் சிவனைக் கண்டதும் வணங்கினான். சிவனுக்குப் பசியில்லை என்பதோ, அவருக்குப் பிரசாதமாகப் பொங்கல் படைப்பதோ அவனுக்குத் தெரியாது. அதனால் தான் அவன் பன்றியைக் கொன்று அதன் மாமிசத்தை நெருப்பில் வாட்டி உண்டு பார்த்துச் சுவையானவற்றைச் சிவனுக்குக் கொடுத்தான். சிவன் அவனது பக்தியை உலகிற்கு உணர்த்துவதற்காகவே கண்ணால் இரத்தத்தை வரும்படி செய்தார். அவன் எதையும் சிந்திக்காது தனது கண்ணை தோன்றி எடுத்து அப்பினான். அதன் பின் மறு கண்ணால் இரத்தம் வர அதையும் தோன்றி எடுத்து அப்ப நினைத்தான். இவ்வாறான அன்புள்ளவன் அறியாமையினால் தவறு செய்தாலும் மன்னிக்கப்படுவன். அத்துடன் வேட்டையாடிய வேடனொருவன் இருண்டமையால் மிருகங்களுக்குப் பயந்து ஒரு வில்வமரத்தில் ஏறி இருந்தான். நித்திரை கொள்ளாதிருப்பதற்காக அவன் வில்வம் இலைகளைப் பறித்துக் கீழே போட்டுக் கொண்டிருந்தான். அன்று சிவராத்திரி தினம். அத்துடன் அம்மரத்தின் கீழ் ஒரு சிவலிங்கம் இருந்தது. பயங்காரணமாக அவன் போட்ட வில்வ இலையைச் சிவன் விருப்புடன் ஏற்று அவனுக்குக் காட்சி கொடுத்தார். சாந்தம்புத்தூரில் வாழ்ந்த வேடனான போர்வீரன் சிவனையே இடையறாது நினைத்துக்கொண்டு வாழ்ந்து வந்தான். அவனுக்குச் சிவனைக் கண்குளிரக் கண்டு தரிசிக்க

வேண்டுமென்ற ஆசை நெடுநாட்களாக இருந்தது. அதனால் சிவனை வணங்கும்போது "இறைவா எனக்குக் காட்சி தா" என்று இரப்பான். ஒரு நாள் அவன் முகம் பார்க்கும் கண்ணாடியைப் பார்த்தபோது அதில் வரையப்பட்டிருந்த வண்ண ஓவியத்தில் நின்று வில் வழங்கினான். இவ்வாறு சாதிபேதம் தகுதி பாராது தன்னை வெளிப்படுத்திக் காட்டுவது சிவனின் இயல்பு" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**33) மொக்கனி அருளிய முழுத்தழல் மேனி**

**34) சொக்க தாகக் காட்டிய தொன்மையும்**

''சிவனடியார்களே, இன்று சிவராத்திரி. அதனால் நாம் சிவனின் புகழைப் பாடவும், கேட்கவும் கூடியுள்ளோம். அன்று சிவராத்திரி என்று தெரியாமல் வில்வம் இலைகளைப் பறித்துப் போட்ட வேடனுக்குச் சிவன் காட்சி கொதடுத்தவர். அதனால் நீங்கள் எல்லோரும் எந்த நினைப்பும் இல்லாமல் சிவனை நினையுங்கள். மாணவர்கள் கற்றலில் திறமை காட்டுவார்கள். விவசாயிகள் அதிக விளைச்சலைப் பெறுவார்கள். வியாபாரிகள் அதிக லாபம் பெறுவார்கள். இப்படி ஒவ்வொரு தொழில்களைச் செய்பவர்களும் மேன்மை அடைவார்கள். சிவன் தனது அடியவர்களுக்கு ஒவ்வொரு தலத்திலும் ஒவ்வொரு வகையில் காட்சியளிக்கிறார். மொக்கானீஸ்வரத்தில் அழகு பொருந்திய ஜெகஜோதியாகத் தீவண்ணமுடையவனாகக் காட்சியளித்தவன் சிவன். அது பழைய வரலாறு. தற்போது வேடர்களுக்கு நேரே காட்சியளித்தது புதுமை வரலாறு. தொழுங்கள், தொழுது கொண்டே இருங்கள். உங்கள் துன்பங்கள், துயரங்கள் யாவும் பஞ்சாகிப் பறந்து விடும்" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**35) அரியொடு பிரமற்கு அளவு அறி ஒண்ணான்**

**36) நரியைக் குதிரை ஆக்கிய நன்மையும்**

''சிவனடியார்களே, இன்று சிவராத்திரி நாள். சிவனை நினைத்து வரம்பெறுவதற்கு உகந்த நாள். அதனால் சிவனை நினையுங்கள். அவனது புகழைப் பாடுங்கள். திருமாலும் பிரமனும் சிவராத்திரி தினமொன்றில்தான் ஆணவ மிடுக்குடன் தாம் தாம் பெரியவர் என்ற நினைப்பில் சண்டையிட்டனர். பல நாட்களாக நடந்த சண்டையில் இருவரில் எவரும் வெற்றி பெறவில்லை. அப்போது ஒரு சோதி அவர்கள் முன் தென்பட்டது. அச்சோதியின் அடியையும், நுனியையும் காண்பவர் யாரோ அவர்தான் பெரியவர் என்று ஓர் அசரீரி கேட்க இருவரும் அடியையும் முடியையும் தேடிக் காணாது திரும்பினர். பல

சிவனடியார்கள் இருந்த இடத்தில் இருந்து கொண்டே சிவனைத் தரிசித்தனர். அருளைப் பெற்றனர். சில சிவனடியார்களுக்குச் சிவன் தேடிச்சென்று அருள் கொடுத்தான். தேவர்கள் ஆணவ மிடுக்குடன் சிவனைத் தேடுவதால்தான் அவர்களுக்குச் சிவன் காட்சி கொடுப்பதில்லை. சிவனடியார்கள் அப்படியல்ல. சிவநினைப்புடன் சிவனைத் தவிரத் தமக்கு உதவுவார் யாரும் இல்லை என்று நினைத்துச் சிவனைத் தொழுவதால் ஓரிரு கணத்தில் சிவ தரிசனம் கிடைக்கும். இது சம்பந்தமான புராணக் கதைகள் பல உண்டு. அவற்றை உங்களுக்குக் கூறியுள்ளேன். அத்துடன் சிவனடியார்களின் துயரைப்போக்க சிவன் தன்னால் முடிந்தவற்றையெல்லாம் செய்வார். மாணிக்கவாசகர் குதிரை வாங்கவெனக் கொண்டு வந்த பொன் முழுவதையும் சிவனடியார்களுக்குச் செலவு செய்துவிட்டுக் குதிரைகள் வாங்கப் பணமில்லாது தவித்தபோது சிவன் காட்டிலிருந்த நரிகளையெல்லாம் குதிரைகளாக மாற்றினார். இது சிவனால் மட்டுமே முடியும். ஏனைய தெய்வங்கள் சிவனை நோக்கித் தவஞ்செய்தே அருளைப் பெறுகின்றன. சிவன் தனது அடியவர்களுக்காக எதையும் சொல்வார் என்பதற்குப் புராணங்களில் உள்ள கதைகளைத் தேடத் தேவையில்லை. நடராசா என்ற சிவபக்தனின் மகளான ஆரணியை அவ்வூர்ப் பணக்காரனான சிவானந்தனின் மகன் பூரணன் விரும்பினான். நடராசா கூலிவேலை செய்பவன். அதை அறிந்த சிவானந்தன் பூரணனை எச்சரித்தான். ஆரணியைத் திருமணம் செய்தால் தனது சொத்தில் பங்கு தரமாட்டேன் என்று சொல்லி மிரட்டினான். பூரணன் சிவபக்தன். ஆரணியும் சிவனின் அடியவள். ஒருநாள் இருவரும் கதிரேசனிடம் வந்து முறையிட்டனர். அவர் சொன்னார்; “பூரணா, காதல் தெய்வீகமானது. காதலால் சிவனை அடைய முடியும். சிவபக்தர்களது காதலைச் சிவன் ஏற்றுக் கொள்வார். பயப்படாமல் இருங்கள் என்றார். சிவானந்தன் பூரணனுக்குத் திருமணம் பேசி முடித்துத் திருமண நாளும் குறித்தார். அதனால் பூரணன் ஆரணியை அழைத்துக் கொண்டு கதிரேசனின் வீட்டுக்கு வந்தான். அதை எதிர்பார்த்த கதிரேசன் அவர்களுக்குத் திருமணப் பதிவைச் செய்து வைத்தார். அன்று பூரணனுக்கு முன்பு விண்ணப்பித்த வெளிநாட்டுப் புலமைப்பரிசில் கிடைத்தது. அவன் ஆரணியை நடராசாவின் வீட்டில் விட்டுவிட்டு வெளிநாடு சென்றான். இரண்டு வருடப் படிப்பு முடிய அவனுக்கு அங்கேயே வேலை கிடைத்தது. அதனால் ஆரணியை அழைத்துச் சென்றான். ஐந்து வருடங்களின் பின் அவர்கள் ஊருக்கு வந்தனர். இப்போ பூரணன் சிவானந்தனைவிடப் பெரிய பணக்காரனாகி விட்டான். அதனால் சிவானந்தன் பூரணனையும் ஆரணியையும் ஏற்றுக் கொண்டார். இது சிவனது அருளால் ஏற்பட்டது என்று நடராசா கூறுகிறார்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

### 37) ஆண்டு கொண்டருள அழகு உறு திருவடி

38) பாண்டியன் தனக்கு பரிமா விற்று

39) ஈண்டு கனகம் இசையப் பெறாஅது

40) ஆண்டான் எம்கோன் அருள் வழி இருப்பத்

41) தூண்டு சோதி தோற்றிய தொன்மையும்

"அன்று காலை சிவானந்தன் கதிரேசனைச் சந்திப்பதற்காக அவரின் வீட்டுக்கு வந்தார். சிவானந்தன் கதிரேசனைவிடப் பெரும் பணக்காரன். சிவன்கோவிலுக்குப் பல உதவிகள் அவ்வப்போது செய்பவர். மடம் கட்டும்போது பெரும்தொகை நிதி உதவி செய்தவர். கோவில் கட்டடங்கள் கட்டும்போது யாரும் கொடுக்காதளவு நிதி கொடுத்தவர். தேர் செய்து கொடுத்தவர். இருந்தும் சிவனது அருள் கிடைக்கவில்லையென்று எல்லோரிடமும் சொல்பவர். அவருக்குக் கதிரேசனை வீடு தேடிச்சென்று சந்திக்க விருப்பமில்லை. அவர் எந்தப் பிரமுகரைச் சந்திக்க விரும்பினாலும், அந்தப் பிரமுகருக்குச் சொல்லி அனுப்புவார். அவர் வந்து சந்திப்பார். இது தன்னுடைய விடயமாகையால் அவரைத் தேடி வந்தார்.

"அண்ணை, நான் செய்யும் திருத்தொண்டில் பத்தில் ஒரு பகுதியைக்கூட யாரும் செய்வதில்லை. அப்படியிருக்க எனக்குத்தான் துன்பங்கள் வருகின்றன. பூரணன் ஒரு சதத்திற்கும் வழியில்லாத குடும்பத்தில் பெண் எடுத்தமையால் என்னை யாரும் மதிக்கிறார்களில்லை. எனது மகள் பூரணிக்கு இருபத்தொன்பது வயதாகிறது. பேசிவரும் சம்பந்தங்கள் நடராசாவின் சம்பந்தந்தால் குழம்புகின்றன. நான் என்ன செய்வது....?" கலங்கினார் சிவானந்தன்.

"சிவா, சிவனிடம் இல்லாத பொன் பொருளா மற்றவர்களிடம் உள்ளது. அவனே எல்லாவற்றையும் படைத்து உயிர்களுக்கு அளித்தவன். அதனால் அவனுக்குப் பொன் பொருள் தேவையில்லை. சுத்தமான உள்ளம் தான் தேவை. உள்ளக் கமலத்தைத்தான் சிவன் விரும்புவார். அதனால் அவனை முழுமனதோடு வணங்கு. மற்றவர்களைக் குறைசொல்லாதே. நீ செய்வதையும் வெளியே சொல்லாதே. ஒருவன் நினைப்பதையே புரிந்து அதற்கான வெகுமதியை அளிப்பவன் சிவன். மன்னன் கருங்கல்லால் பெரியதொரு கோவில் கட்ட அவன் பூசலார் மனத்தினுள் கட்டிய கோவிலினுள் சென்று அமர்ந்தவன். பாண்டிய மன்னன் ஒருவன் தன்னிடமிருந்த குதிரைகளையெல்லாம் விற்றுப்பெற்ற பொன்னை அவனுக்குச் சமர்ப்பித்தபோது அதை ஏற்காது பாண்டியனை அருள்நெறியில் நிலைத்திருக்கச் செய்வதற்காக தனது சோதி வடிவத்தை

அவனுக்குக்காட்டி அவனை ஆட்கொண்டவர். பொன் பொருள் தீயவர்களிடமும் விதிவசத்தால் வந்து சேரும். ஆனால் நல்ல மனம் விதிவசத்தால் வராது. சிவனைத் தொழுதால்தான் வரும். பூரணி பெரும் சிவபக்தை. சிவபக்தையானாலும் உரிய நேரத்தில் தான் நடப்பை நடக்கும். அப்போது அது பெரும் கொடையாக அமையும். பூரணியின் விடயத்தை அவளிடமே விட்டுவிடு அவளைச் சிவன் கவனிப்பான். உனது மனதிலுள்ள அழுக்குகளான சினம், கௌரவம், பணத்திமிர் என்பவற்றை நீக்கு. மறுகணம் உனக்கு விடிவு கிடைக்கும்" என்றார் கதிரேசன்.

**42) அந்தணன் ஆகி ஆண்டு கொண்டருளி**

**43) இந்திர ஞாலம் காட்டிய இயல்பும்**

"சிவா, மாணிக்கவாசகர் சொல்கிறார்; 'வேதியனாக வந்து என்னை ஆட்கொண்டு இப்பூவுலகம் மயக்கம் தரும் இந்திரஜாலம் போன்றது என்று தெளிவுபடுத்தினாய்; அது உனது அருளால் உண்டானது' என்று சொல்லும்போது நாம் எம் மாத்திரம். இந்த உலகில் படைக்கப்பட்டவை எல்லாம் மாயையால் ஆனது. எல்லாம் இன்பம் தருவதைப்போலத் தோன்றி அளவில்லாத துன்பத்தையே தரும். பணத்தை எடுத்துப் பார். அளவுக்கதிகமான உனது பணத்தால் எதைச் சாதித்தாய்..? உனது மகளின் திருமணத்தையாவது முடிக்க முடிந்ததா….? இல்லை மகிழ்ச்சியைத் தந்ததா…? இல்லை நிம்மதியைத் தந்ததா…? போட்டா போட்டி நிறைந்த உலகத்தில் வெற்றியென்பது தோல்வியின் ஆரம்பம் என்பதை உணர்ந்தவர்கள்தான் இன்பமடைகின்றனர். எதையும் தேடாது சிவனின் அருளைத் தேடியோர் எல்லாவற்றையும் பெற்று மகிழ்வுடன் வாழ்கின்றனர். பறவைகள், மிருகங்கள் உட்படப் பல ஜீவராசிகள் சிவனடியார்களைப்போல அந்த நேரம் உணவு கிடைத்தால் போதும் என்று வாழ்வதால் அவையும் சிவனடியார்களாகவே வாழ்கின்றன. பற்றுக்கள் மிகுந்த மனிதர்கள்தான் அளவுக்கதிகமாக ஆசைப்பட்டு வாழ்க்கையை அழிக்கின்றனர். அதனால் அமைதியாக இரு. அவசரப்படாதே. முயற்சி செய். ஆனால் அதில் நம்பிக்கை வைக்காதே. அது சிவன் செயலாக நினை. அது நிறைவேறினால் மகிழ்ச்சி. நிறைவேறாவிட்டால் சிவனைப் பிரார்த்தனை செய். அவர் நல்லபடி முடித்து வைப்பார்" என்றார் கதிரேசன்.

**44) மதுரைப் பெரு நல் மாநகர் இருந்து**

## 45) குதிரைச் சேவகன் ஆகிய கொள்கையும்

சிவானந்தன் வந்து கதிரேசனுக்குக் கூறிவிட்டுச் சென்ற மறுநாள் அவ்வூர் வர்த்தகனான மாசிலாமணி கதிரேசன் வீட்டுக்கு வந்து சொன்னார்; "எனது மகன் செந்தூரனை உங்களுக்குத் தெரியும். உங்களைத் தெய்வமாக மதிப்பவன். சிவனின் அடியவன். என்னுடன் சேர்ந்து தொழில் செய்கிறான்; அவனுக்குப் பூரணி மீது காதல் உண்டாகிவிட்டது. அதனால் வேலையில் கவனம் செலுத்துகிறானில்லை. எனக்கு அவன் ஒரே மகன். எனது சொத்து முழுவதும் அவனுக்குத்தான். சிவானந்தன் என்னைவிடப் பணபலம் இல்லாதவன். இருந்தாலும் வலியச் சென்று கேட்டால், திமிருடன் பேசுவான். அது வீணான மனக்குழப்பத்தை உண்டுபண்ணும். அதனால் நீங்கள்தான் அதைக் கேட்டுச் சொல்லுதல் வேண்டும்" என்று கூறிவிட்டுச் சென்றான்.

கதிரேசனுக்குச் சிவானந்தனின் குணம் தெரியும். அவன் தன்னைவிட மேலானவர்கள் யாரும் இல்லை என்ற நினைப்போடு வாழ்பவன். அதனால் பூரணியைச் சந்தித்து அவள் அவனை விரும்புகிறாளா என அறிய வேண்டும் என்ற நினைப்புடன் சிவானந்தனின் வீட்டுக்கு வந்தார். பூரணி வந்து அவரை வரவேற்றாள்; "வாருங்கோ, சிவன் என்னைத் தேடிவந்த உணர்வு எனக்கு உண்டாகிறது. ஏதோ நல்லது நடக்கப் போகிறது அமருங்கள்" என்று மகிழ்வுடன் கதிரேசனை வணங்கினாள்.

"பூரணி உன்னோடு பேசத்தானம்மா வந்தேன். நீ செந்தூரனைப்பற்றி என்ன நினைக்கிறாய்"?

அவள் பேசவில்லை. அவளது முகம் நவரசக் கோலமிட்டது. "அவன் ஒழுக்கமானவன். எனது அன்புக்குப் பாத்திரமானவன். அவன் உன்னை விரும்புகிறான். உனது விருப்பத்தை அறியாது நான் உனது தந்தையுடன் பேசமுடியாது" என்றார் கதிரேசன்.

"நீங்கள் நல்லவர் என்று சொல்லும்போது அதை எப்படி நான் மறுப்பது. சிவனின் சித்தம் அதுவானால் என்னால் என்ன செய்ய முடியும்" என்றாள்.

அப்போது சிவானந்தன் அங்கே வந்தார்; "சிவபூசையில் இருந்தேன். தங்களது வரவை எதிர்பார்க்கவில்லை" என்றார் சிவானந்தன்.

“எல்லாம் சிவனது சித்தம். நேற்று நீ உனது மகளின் திருமணத்தைப் பற்றிச் சொன்னாய். இன்று காலை மாசிலாமணி என்னைச் சந்தித்து தனது மகன் உனது மகளை விரும்புவதாகச் சொன்னான். நீ சம்மதித்தால் மேற்கொண்டு பேசலாம்” என்றார் கதிரேசன்.

“எனக்கு விருப்பமில்லை. ஒருவேளை எனது மகள் விரும்பினாலும் நான் விரும்ப மாட்டேன். மாசிலாமணியினது உற்றார், உறவினர், சகோதரர்கள் எல்லோரும் வறியவர்கள். எனது தகுதிக்கு அந்தக் குடும்பம் ஒத்து வராது” என்றார் சிவானந்தன்.

“சிவா, சிவன் தகுதி, தராதரம் பாராது எல்லோரது உள்ளத்திலும் சமமாக இருக்கிறார். விதிவசத்தால் மாசிலாமணி பணக்காரனாக இருக்கிறான். அவனது உறவினர்கள் ஏழைகளாக இருக்கின்றனர். இது அவர்களின் தவறல்ல. செந்தூரன் நல்லவன். உன்னைவிடப் பணக்காரன். அவன் விரும்பியதால் அவனுடைய தந்தை வந்து என்னுடன் பேசினார். தகுதி, தராதரம், கல்வி, பணம், பொருள் யாவற்றையும் தேடிக் கொள்ளலாம். முப்பது வருடங்களுக்கு முன் நீ கூலித்தொழில் செய்தாய்; ஒரு கடையில் சிப்பந்தியாகச் சேர்ந்தாய். அதன் உரிமையாளர் உன்னை விரும்பித் தனது மகளை உனக்குத் திருமணம் செய்து வைத்ததால் இன்று நீ பெரும் பணக்காரன். அதுபோல எப்பவும் எதுவும் நடக்கும். உலகையெல்லாம் படைத்துக் காத்து அருளுகின்ற சிவன் தகுதி தராதரதம் பார்ப்பவரா? அவர் தனது அடியார்களுக்காக எத்தகைய கேவலமான தொழில்களைச் செய்தார். அவர் தகுதி தராதரதம் பார்த்தால் சிவனடியார்கள் துன்பத்தைத்தவிர வேறு எதையும் அனுபவிக்கமாட்டார்கள். பெருமைமிக்க மதுரை மாநகரில் தனது தகுதி தராதரத்தைப் பாராது மாணிக்கவாசகருக்காகக் குதிரைப்பாகனாக வந்தவர். இதையெல்லாம் உனக்குச் சொல்லிப் பயனில்லை. ஏனென்றால் நீ எதையும் நம்பாதவன். பூரணியோடு கதைத்தேன். அவளுக்கு விருப்பம். உனது மகனின் செயல்போல் நடப்பதை நீ விரும்புகிறாயா…? அது தான் சிவனின் சித்தமென்றால் அது நடக்கட்டும்” என்றார் கதிரேசன்.

**46) ஆங்கு அது தன்னில் அடியவட்கு ஆகப்**

**47) பாங்கு ஆய் மண் சுமந்தருளிய பரிசும்**

“”கோபிக்காதீர்கள், அவள் எனக்கு ஒரே ஒரு மகள். நல்ல இடத்தில் செய்துவைக்க விரும்புகிறேன்” என்றார் சிவானந்தன்.

"நான் கோபிப்பதில்லை. கோபம் கொள்ளவும் மாட்டேன். நல்ல இடம் என்று நீ எதைச் சொல்கிறாய். நல்ல இடம் என்பதற்குப் புது வரைவிலக்கணம் வகுத்துள்ளாய் போலும். மாசிலாமணியும் செந்தூரனும் சிவபக்தர்கள். ஒழுக்கமானவர்கள், பெருந்தனவந்தர்கள். அவர்களது இனத்தவர்களை நீ ஏன் ஆராய்கிறாய்..? செந்தூரனைப்பற்றி ஆராய்ந்துபார். அவனிடம் குறைகள் இருந்தால் சொல்லு. ஒழுக்கக் குறைபாடு, சிவசிந்தனை, தான தர்மம் செய்யாமை, ஆணவமிடுக்கு இவைதான் ஒழுக்கக்கேடுகள். ஒரு சிவபக்தன் கூலிவேலை செய்பவனாக இருந்தாலும், அவன் பெரும் பணக்காரனைவிட உயர்ந்தவன். ஏனென்றால் மதுரைநகரில் பிட்டுவிற்றுப் பிழைப்பு நடாத்தும் வந்தி என்ற மூதாட்டிக்குக் கூலியாளாக வந்து பிட்டை வாங்கி உண்ட சிவபெருமான் மன்னனிடம் அடியும் வாங்கியவர். இறைவன் அடியார்க்கு அடியவன்; எளியவன். அவன் தொண்டர்களுக்குத் தொண்டன். தனது அடியார்களுக்கு எந்தத் தொண்டும் செய்யக் காத்திருப்பவன். அப்படியான சிவனின் அடியார்கள் தகுதி தராதரம் பார்க்கக்கூடாது. அவன் பக்தன் என்று அறிந்தவுடன் அவனை மதிக்க வேண்டும். இது எனது விருப்பம். அப்படித்தான் நான் வாழ்ந்து வருகிறேன். சிவனடியார்கள் எந்த விதத்திலும் குறைந்தவாகள் அல்ல; ஏனென்றால் அவர்களுக்குத் தொண்டு செய்யச் சிவன் காத்திருக்கிறான். சென்றவருடம் நல்லைநாதனுக்குக் கடும்நோய் ஏற்பட்டதால் அவரால் எழுந்து நடக்க முடியவில்லை. அது விதைப்புக்காலம். வயலுக்குச் செல்லாது வீட்டில் இருந்தார். என்னால் முடியவில்லை சிவன் சித்தம்" என்று கூறிவிட்டு இருந்தார். கிராமத்தவர் ஒன்றுகூடி வயலை உழுது பண்படுத்திப் பின் விதைத்தனர். அவர்களைக் கேட்டால் நல்லைநாதன் தான் நோய்வாய்ப்பட்டமையால் ஒவ்வொருவரினதும் வீட்டுக்குச் சென்று வயலை உழுது பண்படுத்தி விதைத்துத் தரும்படி கேட்டவர் என்கிறார்கள். நல்லைநாதன் எழும்ப முடியாது படுத்த படுக்கையாக இருக்கிறார். எப்படிச் சென்று கேட்டிருப்பார். சிவனிடம் பொறுப்பை ஒப்படைத்தவர் எதையும் நினையாது சிவசித்தம் என்றிருந்தால் எல்லாம் நடைபெறும்" என்றார் கதிரேசன்.

## 48) உத்தர கோச மங்கையுள் இருந்து

## 49) வித்தக வேடம் காட்டிய இயல்பும்

''சிவா, சிவன் ஒவ்வொரு தலங்களிலும், ஒவ்வொரு தேவைக்காக வீற்றிருக்கிறார். உத்தரகோச மங்கை என்ற திருக்கோவிலில் ஞானாச்சாரியனாக எழுந்தருளி இருந்து போதின்பத்தை அள்ளி வழங்கும் சிவன் ஏனைய கோவில்களில் இருந்து அருளை வழங்கமாட்டான் என்று கருதக்கூடாது.

பல்லாயிரக்கணக்கான தோற்றங்களைச் சிவன் எடுத்தாலும், அவன் ஒருவன். அதனால் அவனது அருளும் ஒன்று என்பதைச் சிவனடியார்கள் உணர்ந்து கொள்ளல் வேண்டும்” என்றார் கதிரேசன்.

**50) பூவணம் அதனில் பொலிந்து இருந்து அருளித்**

**51) தூவண மேனி காட்டி தொன்மையும்**

‘‘அண்ணை, திருவுத்தரகோசமங்கை, பூவாணம், திருவாவடுதுறை போன்ற தலங்களில் வீற்றிருக்கும் சிவன் பிரகாசமான தனது திருமேனியைக் காட்டியருள்வது தொன்று தொட்டு நிகழும் அதிசயம் என்று கூறுகிறார்கள். அங்கு ஒரு முறை சென்று வரட்டா?” என்று கதிரேசனைக் கேட்டார் சிவானந்தன்.

“எங்கும் உள்ள சிவன் ஒருவன் தான். நாயன்மார்கள் ஒவ்வொரு திருக்கோவில்களையும் தரிசிக்கும்போது அங்கு வீற்றிருந்து அருள்பாலிக்கும் சிவனை மக்களின் குறைகளைத் தீர்க்குமாறு வேண்ட அவர் அவைகளைத் தீர்த்து வைத்தார். அவை வரலாற்றில் பதிவாகின. அவர்கள் செல்லாத கோவில்களில் இருக்கும் சிவன் ஆற்றல் குறைந்தவனல்ல. நான் எனது ஊரில் உள்ள சிவனையே வேண்டுவன். அவன் எனது வேண்டுகோளை ஏற்றுச் செயற்படுத்துவான். நேற்று நீ வந்து உனது மகளுக்குத் திருமணமாகவில்லை என்று கூறித் துன்பப்பட்டாய். அதை நான் சிவனிடம் முறையிட்டேன். பூரணி சிவபக்தை அதனால் மறுநாள் மாசிலாமணி வந்து தனது மகனுக்குப் பூரணியைத் திருமணம் பேசுமாறு சொன்னார். இது புதுமை இல்லையா…? இதைப் பதிவு செய்து வைத்தால் எம்மூர்ச் சிவனும் வரலாற்றில் இடம் பிடிப்பார். அதனால் அங்கு செல்லத் தேவையில்லை. உனக்குச் சந்தேகமிருந்தால் சென்று வா. ஆனால் செந்தூரனைவிட ஒரு நல்ல மாப்பிள்ளை உனக்குக் கிடைக்க மாட்டான். தற்போதைய பெற்றோரும் அரச உத்தியோகத்தரை விரும்புகின்றனர். இது அறியாமையாகும். சிவனை நம்புவோர் தம்மைப்பற்றிச் சிந்திக்கத் தேவையில்லை. ஏனென்றால் அவைகளைச் சிவன் நல்லமுறையில் வழிப்படுத்துவான்.” என்றார் கதிரேசன்.

**52) வாதவூரினில் வந்து இனிது அருளி**

**53) பாதச் சிலம்பொலி காட்டிய பண்பும்**

‘‘சிவா, மாணிக்கவாசகர் வாதவூரில் பிறந்தவர். அங்குள்ள சிவன் மீது மாறாத பக்தி கொண்ட மாணிக்கவாசகருக்கு அங்கிருந்த சிவனின் பாதங்களில் அணிந்த சிலம்பின் ஓசை இனிமையாகக் கேட்டதாம். இதில் புதுமை எதுவும் இல்லை. நாம் பல்வேறுபட்ட சிவத்தலங்களுக்குச் சென்று சிவனைத் தரிசிக்கலாம். சிவதலங்கள் நாயன்மார்களால் தரிசிக்கப்பட்டவை. அவர்களால் புகழ்ந்து பாடப்பெற்றவை. அது பெரும் சிறப்புத்தான். அதற்காக அங்கெல்லாம் சென்று வழிபட்டால்தான் சிவனது திருவடியைக் காணலாமென்றில்லை. நல்லைநாதன் அடிக்கடி சொல்வான் இரவில் சிவன் வீதிகளில் உலாவுகிறார். அப்போது அவரது காலில் அணிந்துள்ள சிலம்பு ஒலி எழுப்புகிறது என்பான். நான் மகிழ்வுடன் கேட்பேன். நீ எதை நினைக்கிறாயோ அதுவாவாய் என்று உபநிடதம் கூறுகிறது. ஒவ்வொரு மனிதரும் தமது எதிர்காலத்தைப் பற்றிக் கற்பனை செய்கின்றனர். அது கனவாக வரும். நினைவுகள் தான் கனவு. சிவன் கனவில் வந்து என்னுடன் உரையாடுவான். அது நான் நினைப்பவையாகத்தான் இருக்கும். அதைப் பிரமை என்று நினைத்தால் அது பிரமைதான். உண்மையென்று நினைத்தால் உண்மையாகிவிடும். நல்லைநாதன் பெரும் சிவபக்தன். அவன் பெரிதாகப் படித்ததில்லை. ஆனால் சிவனோடு ஏற்பட்ட அனுபவங்களைக் குறித்து வைத்துள்ளான். அதை எழுதப் போவதாகவும் சொல்கிறான். ஒருவரது அனுபவம்தான் மற்றவர்களுக்குப் பாடமாக அமையும். நாயன்மார்களின் அனுபவம்தான் பக்தியை வளர்க்கிறது. இதில் ஆச்சரியப்பட எதுவும் இல்லை’’ என்றார் கதிரேசன்.

**54) திரு ஆர் பெருந்துறைச் செல்வன் ஆகிக்**

**55) கரு ஆர் சோதியில் கரந்த கள்ளமும்**

‘‘சிவா, சிவன் மனம் கவர் கள்வனாவான். அவன் திருப்பெருந்துறையில் ஞானாசிரியனாக வந்து தனது கோலத்தை மறைத்து மாறாத சோதியாய்த் தன்னை வெளிப்படுத்தி மாணிக்கவாசகரை ஆட்கொண்டவன். அடியார்களுக்கு அருள் செய்வதற்காகச் சிவன் வடிவமெடுக்கிறான். அக்காரியம் முடிந்ததும் அவன் பழையபடி உருவமில்லாது போகிறான். இப்போ உனது மகளுக்கு அருளத்தான் அவன் மாசிலாமணியின் மனதில் புகுந்து அவனைச் செயற்பட வைத்திருக்கிறான். அதை நீ புரியாது திருப்பெருந்துறைக்குச் செல்ல நினைக்கிறாய். உலகெங்கும் ஒருகோடி சிவலிங்கங்கள் உள்ளன. அதில் ஒன்றுதான் எமது சிவலிங்கம். ஒரே மரத்தில் ஆயிரம் காய்கள் காய்த்தாலும் அவை ஒரே சுவையை உடையனவாகத்தான் இருக்கும். ஒன்றாவது மாறுபாடான சுவையைத் தராது. அதுதான் படைப்பின் மகிமை. அப்போ படைத்தவன்

மாறுபாடு அடைவானா? இப்போ உனது மகளுக்கு யார் கணவன் என்று சிவன் அறிவித்து விட்டான். அதைச் சிவபக்தர்கள் உணர்வார்கள். உனது மகனைப்போல உனது மகள் நடக்குமுன் சிவச் செயலென நினைத்துச் செயலாற்று. நீ வர்த்தகன் வர்த்தகத்தைப் பற்றி நான் உனக்குச் சொல்லத் தேவையில்லை. அதுபோலச் சிவனடியார்க்குச் சிவனைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. அதனால் வீட்டுக்குச் சென்று உனது மனைவியுடனும், உனது உறவினர்களுடனும் சேர்ந்து முடிவை எடு'' என்று சொன்னபோது சிவானந்தன் சொன்னார்; ''மாசிலாமணி எனது மனைவியின் இரத்த உறவினன். மாசிலாமணி உங்களுடன் கதைத்ததைக் கேள்விப்பட்ட எனது மனைவி மாசிலாமணியின் வீட்டுக்கு உறவினள் போலச் சென்று வந்துவிட்டாள். அவள் நினைத்தால் அதை மாற்றமாட்டாள்.'' என்றார் சிவானந்தன்.

**56) பூவலம் அதனில் பொலிந்து இனிது அருளிப்**

**57) பாவம் நாசம் ஆக்கிய பரிசும்**

''சிவா, பூவலம் என்ற ஊரில் சிவன் சென்றமர்ந்து அங்கு பாவம் செய்தவர்களின் பாவத்தைப் போக்கியருளியவர் என்று மாணிக்கவாசகர் கூறுகிறார். அங்கல்ல எங்கு எவர் பாவம் செய்தாலும் அதைச் சிவனைத் தவிர வேறு எவராலும் போக்க முடியாது. பாவம் செய்ததை எப்படி அறிவது என்று நினைக்கிறாயா…? தற்போது வாழும் வாழ்க்கை முறையைக் கொண்டு அதை அறிந்து கொள்ளலாம். முன்னைய பிறப்பில் புண்ணியம் செய்தமையால்தான் இப்பிறப்பில் சகல வசதிகளும் உள்ளவனாக நீ பிறந்திருக்கின்றாய். அந்த வசதிகளைத் தீமையில்லாத செயல்கள் மூலம் பெருக்குதல் வேண்டும். நீ வியாபாரி. வியாபாரி என்பவன் பிறரது பொருளைத் தன்பொருளாக நினைத்தல் வேண்டும். அப்படி நினைத்தால் பிறரின் பொருட்களை வஞ்சகமான நிலையில் கவரும் எண்ணம் வராது. ஒரு செயலில் நீதியாக நடப்பவன் சகல செயல்களிலும் நீதியாக நடப்பான். அவனது வாழ்வு சிவவாழ்வாக இருக்கும். அதனால் பாவம் குறையும். ஒழுக்கம் என்பது சிவத்தைக் குறிக்கும். ஒழுக்கமான வாழ்வு பாவத்தை நீக்கும். இதை உணர்ந்தவன் சிவனை அடைய விரும்புவனாவான். அவனது பாவத்தைச் சிவன் நீக்குவார். அதுதான் பூவலம் என்ற ஊரில் நடந்தது'' என்றார் கதிரேசன்.

**58) தண்ணீர்ப் பந்தர் சயம் பெறவைத்து**

**59) நல்நீர்ச் சேவகன் ஆகிய தன்மையும்**

கதிரேசன் எடுத்துச் சொல்லியும் சிவானந்தனின் மனம் அலை பாய்ந்தது. வியாபாரத்தின் மூலம் மாசிலாமணிக்கும் அவருக்குமிடையில் பகை இருந்தது. அதனால் பல பிரச்சினைகள் வந்தன. அவற்றை மாசிலாமணி பொருட்படுத்துவதில்லை. அவரவரின் வாழ்க்கையைச் சிவன் அவரவரிடம் ஒப்படைத்துவிட்டுக் கண்காணித்துக் கொண்டிருக்கிறான். அவன் நினைத்ததுதான் நடக்கும். அது நல்லதாகவே நடக்கும் என்றுணர்ந்த சிவனடியாரான மாசிலாமணி எந்தப் பிரச்சினையையும் பெரிதாகப் பொருட்படுத்துவதில்லை. ஆனால் சிவானந்தன் சிறியதொரு பிரச்சினையையும் பெரிதாக எடுப்பார். அதனால் அவரது மனம் செந்தூரனை ஏற்க மறுத்தது.

''சிவா, சிவன் உதவி செய்ய வேண்டும் என்று நினைத்துவிட்டால் எந்த வழியில் சென்றாலும் உதவி செய்வார். ஒருமுறை அவரது அடியவனான பாண்டிய மன்னனை எதிரிகள் ஒன்று சேர்ந்து தாக்கினர். பாண்டியன் சிவனைத் தொழுது நீயே என்னைக் காத்தல் வேண்டும் என்று பிரார்த்தித்தான். அதனால் பாண்டியன் வெற்றி பெறும் பொருட்டுத் சிவபெருமான் தண்ணீர்ப்பந்தல் அமைத்துப் போர் வீரர்களுக்கு நல்ல நீர் வழங்கும்போது அருளையும் வழங்கினார். அதனால் போர்வீரர்கள் பெரும் பலம் பெற்றுப் போராடி எதிரிகளை விரட்டியடித்தனர். இவ்வாறு அடியவர்களுக்கு எப்பொழுதும் சிவன் நன்மையே செய்வான். அதனால் சிவன் இருவரையும் சேர்த்து வைக்க முடிவு செய்து விட்டான். அவரது எண்ணத்தில் குறுக்கீடு செய்து துன்பப்படாதே'' என்றார் கதிரேசன்.

**60) விருந்தினன் ஆகி வெண்காடு அதனில்**

**61) குருந்தின் கீழ்அன்று இருந்த கொள்கையும்**

''அதைக் கேட்ட சிவானந்தன் சொன்னார்; ''செந்தூரன் மிகவும் நல்லவன், வல்லவன், சிவபக்தன். மாசிலாமணி பெருந் தனவந்தன். இப்போது ஓர் ஆடைத் தொழிற்சாலையை ஆரம்பிக்கப் போகிறான். அவனைப் போல ஒரு மாப்பிள்ளையைத் தேடிப் பிடிக்க முடியாது. எனக்கும் மாசிலாமணிக்கும் வெகுகாலமாக வியாபாரப்பகை இருந்து வருகிறது. எப்படி எனது சுயமரியாதையைவிட்டு இறங்கிப் போவது"

"சிவா, நீ இறங்கிப் போகத் தேவையில்லை. நீ சம்மதித்தால் மாசிலாமணி முறைப்படி வந்து பெண் கேட்பார். அவர் தகுதி, தராதரம்

பார்ப்பதில்லை. அத்துடன் செருக்கும் சினமும் இல்லாத ஒரு சிவனடியார். எமக்குள் எவ்வளவு பகை இருந்தாலும் எனது மகன் அவளை விரும்பி விட்டான். அவன் எனது செல்லமகன். அவன் கேட்டதையெல்லாம் வாங்கிக் கொடுப்பேன். இது வாழ்க்கை. நூறாண்டுகள் சேர்ந்து மகிழ்வுடன் வாழவேண்டும் என்பதற்காக ஒப்புக் கொண்டேன். அத்துடன் சிவசித்தம் அப்படியென்றால் அப்படி நடக்கட்டும்" என்றார். உனக்கு இன்னும் பூரணமான சிவநம்பிக்கை வரவில்லை. வந்திருந்தால் இப்படிச் சொல்லமாட்டாய். மாசிலாமணி சொன்னார்; "ஐயா, நான் மிகவும் கஷ்டப்பட்ட குடும்பத்தில் பிறந்தவன். எனது தந்தை பெரும் சிவபக்தர். அவர் சொல்வார் எனது ஆண்டவன் சிவன். அவனருளால் ஒரு சிறிய கடையைத் தொடங்கி இந்த நிலைக்கு வந்தேன். நீயும் உனது வம்சமும் சிவனை மறவாது தொழ வேண்டும். சிவனடியானைச் சிவனாக நினைத்தல் வேண்டும். அவர்களுக்கு உணவு கொடுத்தல் வேண்டும். சிவன் தேவைக்கேற்றபடி தோற்றம் எடுத்து அடியார்களை ஆட்கொள்பவன். மாணிக்கவாசகர் தன்னை ஆட்கொள்ளச் சிவன் திருவெண்காட்டிலே உள்ள குருந்தமரநிழலில் விருந்தாக வந்து தங்கியிருந்தவன். அதனால் எனக்கும் என்னோடு இருந்த சிவனடியார்க்கும் அவன் விருந்தானான் என்றார். இது உண்மை ஒவ்வொரு சிவனடியாரையும் ஆட்கொள்ளச் சிவன் ஒவ்வொரு வேடந்தாங்கி வருவான். அதனால் உன்னை நாடிவந்து சிவனின் பெயரைச் சொல்லிக் கேட்டாலும் தயக்கமில்லாது கொடுத்துவிடு. ஒரு சிவனடியான் தனது தோட்டத்தில் பழுத்த வாழைக்குலையைச் சிவனுக்குப் படைக்க எடுத்துச் சென்றான். வழியில் சிவன் ஒரு முதியவராகத் தோன்றி எனக்கு மிகவும் பசிக்கிறது. இரண்டு பழங்கள் தா என்று கேட்டார். அவன் கோவிலில் சிவனுக்குப் படைத்துவிட்டுத் தருகிறேன் என்று சொல்லிப் படைத்துவிட்டுத் பார்த்தபோது அந்த முதியவரைக் காணவில்லை. அதனால் சிவனடியார்கள் கேட்டால் சிவனுக்குப் படைக்கப்பட வேண்டியதானாலும் கொடுத்துவிடு. ஒவ்வொரு உயிரிலும் கோவில் கொண்டிருக்கும் சிவன் அதை ஏற்பான். கொடுக்குமுன் அதைச் சிவனுக்கு அர்ப்பணம் செய்துவிடு" என்றவர். அவரின் சொற்படிதான் நான் வாழ்ந்து வருகிறேன். பூரணி முழுமையான சிவபக்தை. அவளை வேண்டாமென்று மறுத்தால் நான் சிவத்துரோகம் செய்தவனாவேன் என்றவர்" என்றார் கதிரேசன்.

அதைக்கேட்ட சிவானந்தன் திகைத்துப் போனார்.

**62) பட்ட மங்கையில் பாங்காய் இருந்து அங்கு**

**63) அட்டமா சித்தி அருளிய அதுவும்**

‘‘சிவா, சிவன் ஒவ்வொரு சிவத்தலங்களிலும் ஒவ்வொரு திருச்செயல்களை நிகழ்த்துவார். சிலவற்றில் ஒன்றுக்கும் மேற்பட்ட திருச்செயல்களை நடத்துவார். இது அவரது அற்புதத் திருவிளையாடல். தனது அடியார்கள் எங்கிருக்கிறார்களோ அங்கு அவர் இருந்து அற்புதங்களை நிகழ்த்துவார். அவர் எங்கும் செல்லாது எங்கும் இருப்பவர். அதனால் அவ்வவ்விடங்களில் தன்னைத் தொழுவோர்க்கு அங்கேயே தோன்றி அற்புதங்களை நிகழ்த்தி அவ்வவ்வடியார்களை மகிழ்விப்பது அவரது இயல்பு. அதன்படி திருப்பட்டமங்கை என்னம் சிவத்தலத்தில் தோன்றியிருந்து அங்கிருந்த சிவனடியார்களுக்கு எட்டுச் சித்திகளையும் (அட்டமா சித்திகளை) அருளினார் என்று சிவவரலாறு கூறுகிறது. அவர் உலகெங்கும் உள்ள ஒரு கோடி சிவத்தலங்களிலும், ஒரே நேரத்தில் தோன்றி அருளும் தன்மை வாய்ந்தவர். யோக சாதனங்களை முறைப்படி செய்தால் அட்டமா சித்திகளைப் பெறலாம். சிவனது அருளாலும் சித்திகள் கிடைக்கும். அதற்கு மிக வலிமையான பக்தி தேவை. அட்டமா சித்திகளை என்பது எட்டுவிதமான சித்திகளைப் பெறல். அவை அனிமா, லகிமா, பிராத்தி, பிரகாம்மியம், மகிமா, ஈசித்தவம், வசித்தவம், காமவசாயிதா என்பனவாகும். அனிமா என்பது சிறியவைக்கெல்லாம் மிகச் சிறிய உயிராகத் தன்னை ஆக்கிக் கொள்ளல். லகிமா என்றால் நிறைவில்லாதவனாகத் தன்னை ஆக்கிக் கொள்ளல். பிரார்த்தி என்றால் வேண்டாதவற்றை வேண்டியவாறு பெறுதல். பிரகாம்மியம் என்றால் இச்சா சுதந்திரம் பெறுதல். மகிமா என்றால் எண்ணத்தால் தன்னை மலைபோன்றவனாக உருவகித்தல். ஈசித்துவம் என்றால் ஈசனைப் போன்று அனைத்தையும் செய்யும் திறமையைப் பெறல். வசித்தவம் என்றால் பிறரை வசியப்படுத்தல். காமவசாயிதா என்றால் எதையும் செய்யும் வல்லமையைப் பெறல். இந்த அட்டமா சித்திகளையும் பெறுபவர் சிவனாகி விடுவர். சிவனுக்குத் தன்னுடைய வல்லமையைச் சிவனடியார்களும் பெற வேண்டும் என்ற தூய எண்ணம் இருப்பதால் தான் இவற்றை உபதேசித்தார். அதனால் உன்போன்றவர்கள் அறிய வேண்டும் என்பதற்காகவே சொன்னேன்” என்றார் கதிரேசன்.

### 64) வேடுவன் ஆகி வேண்டும் உருக் கொண்டு

### 65) காடு அது தன்னில் கரந்த கள்ளமும்

‘‘சிவா, பக்தர்களுக்காகச் சிவன் எந்த உருவும் எடுப்பார். அதனால்தான் பன்றியுருவெடுத்தார். மீனவனாக மாறினார். வேடனாக உருவெடுத்தார். தன்னை எப்போது எப்படி தோற்றுவிப்பது, எப்படி மறைப்பது என்ற தன்மையே சிவனது

திருவிளையாடல்களாகும். அது அவனால் மட்டுமே முடியும். அது அவனுக்குப் பெருமை. சிவன் உருமாறியும் வருவார். உருவத்துடனும் வருவார். பிறரின் உருவிலும் வருவார். இது அவரது இயல்பு. மாசிலாமணிக்கு உன்னைப் பிடிப்பதில்லை. எனது பேச்சை எடுத்தாலே அவர் கொதித்தெழுவார். செந்தூரன் தான் பூரணியை விரும்புவதாகத் தனது நண்பனுக்குக் கூறியபோது அவன் மாசிலாமணியின் உள்நிலையை அறிய அவருக்குச் சொன்னபோது அவர் கொதித்தெழுந்து என்னுடன் பிரச்சினைப்பட்டார். அப்பாவின் பேச்சை ஒருபோதும் மீறாத நான் பயந்து போனேன். எனது நிலையைச் சிவனுக்குச் சொன்னேன். சில நாட்கள் கழிய எனக்குக்கூடச் சொல்லாது அப்பா உங்களிடம் வந்து கதைத்தவர். யாருக்கும் அடிபணியாதவர், யாரின் பேச்சையும் கேளாதவர். எனது தாயார் கதைத்தபோது கடுமையாக எச்சரித்தவர். திடீரென்று மனம் மாறியதற்குக் காரணம் சிவன். சிவன் தேவைக்கேற்ப வேடந்தாங்கி சிவனடியார்க்கு அருள்பவர். அருள் புரிந்ததும் மறைபவர். அண்மையில் ஒரு சிவனடியார் வீட்டுக்கு வந்தார். சிவனடியார்களைச் சிவனாகப் பேணும் அப்பா அவரை மதித்துத் தொழுது உணவு கொடுத்தார். அப்போது அவர்; "மகனே, உனது மகன் ஒரு தொழிலதிபர் ஆகப் போகிறான். அவனைத் துன்பப்படுத்தாது அவனது எண்ணங்களை நிறைவு செய். அதனால் சிவன் உனக்கு அருள்வார்" என்று கூறிவிட்டுச் சென்றார். அதன் பின்புதான் அப்பா உங்களிடம் வந்தவர். அன்று வந்த சிவனடியார் சிவன் என்பதை நான் உணர்ந்து கொண்டேன்." என்றவர். அதனால் சிவனருள் பெற்ற அவனது திருமணத்தை மகிழ்வுடன் நடத்திவை, ஏனென்றால் இருவரும் சிவபக்தர்கள். புராணங்களில்தான் சிவன் வருவார். சாதாரண மனித வாழ்வில் வரமாட்டார் என்று சொல்வாய். அது பிழை. ஆபத்தான வேளைகளில் சிவன் தான் எந்த வகையிலும் உதவுவார். அதை நம்புவன் தான் சிவனின் அடியவன்" என்றார் கதிரேசன்.

**66) மெய் காட் டிட்டு வேண்டு உருக்கொண்டு**

**67) தக்கான் ஒருவன் ஆகிய தன்மையும்**

கதிரேசன் கூறுவதைக் கேட்டுக் கொண்டிருந்த மகாலிங்கம் சொன்னார்; "அண்ணை, இவன் சிவனை நம்பாதவன். இவனுக்காகச் சிவன் சிவனடியாராக வரவில்லை. பூரணிக்காக வந்தவர். பூரணி பெரும் சிவபக்தை. அத்துடன் சிவசேவை செய்வதை நோக்காகக் கொண்டவள். அடியவர்களுக்கு உதவுவதற்காகச் சிவன் பிரம்பால் அடிவாங்கியவன். சிவனடியான் என்பதை வெளிப்படுத்துவதற்காக தனது அப்போதைய நிலைக்கேற்பச் சிவன் தன்னை மாற்றிக் கொள்வான். அதனால் தான் கல்லுமனம் படைத்த மாசிலாமணியை

உருக்குவதற்காகச் சிவனடியார் வேடந்தாங்கிச் சென்றவன். சிவனடியார்கள் மீது மிகுந்த பற்றுக்கொண்ட மாசிலாமணி சிவனடியாரின் சொல்லை வேதவாக்காகக் கேட்பான் என்பதைத் தெரிந்துதான் அவ் வேடந்தாங்கியவர். இது சிவனைப்பற்றி முழுமையாகத் தெரிந்தவர்களுக்குத்தான் தெரியும். நான் முன்பு குடித்துக்கொண்டு திரியும்போது உவனைப் போலத்தான் நடந்து கொள்வேன். சிறிதென்றாலும் சிவசிந்தனை இருந்தால்தான் இவையெல்லாம் புரியும். புரிந்தவர்கள் சொல்வதையும் ஏற்றுக்கொள்ள முடியும். நான் காலையில் செந்தூரனைக் கண்டு கதைத்தேன். அவன் சிவனின் மீது முழுமையான நம்பிக்கை வைத்துள்ளான். சிவன் புதிய வேடமெடுத்து எனக்கு உதவுவார். அப்பா வந்த சிவனடியாரைத் தேடுகிறார். அவரைக் கண்டு கொள்ள முடியவில்லை. அடியவர்களுக்கு உதவ வேடமிடும் சிவன் அவ்விடயம் முடிந்ததும் வேடத்தைக் கலைத்துவிடுவார்" என்றவன். அது நடக்கும். அதற்காகக் கல்நெஞ்சு படைத்தவர்களுக்கு உபதேசிக்கத் தேவையில்லை. காலம் உணர்த்தும்" என்றவர்.

**68) ஓரியூரில் உகந்து இனிது அருளிப்**

**69) பார் இரும் பாலகன் ஆகிய பரிசும்**

‘‘செந்தூரன் கதிரேசனின் வீட்டுக்கு வந்தபோது அங்கு மகாலிங்கமும், நல்லைநாதனும், சிவானந்தனும் இருந்தனர். செந்தூரனைக் கண்ட சிவானந்தன் எழுந்து வெளியே சென்றான். அவரைத் தடுப்பதற்காக நல்லைநாதன் எழுந்தபோது கதிரேசன் சொன்னார்; "நல்லை, தாகமாக இருக்கிறது. தண்ணீர் கொண்டு வா"

நல்லைநாதன் திகைத்துப்போய்ச் சில கணங்கள் நின்றார். கதிரேசன் தனது மனைவியிடமும், வேலையாட்களிடமும் தான் சொல்லி வேலை செய்விப்பார். அவரோடு பழகிய காலத்தில் ஒரு முறையாவது அவர் இவ்வாறு நடந்ததில்லை. கதிரேசன் உற்று நல்லைநாதனைப் பார்க்க, நல்லைநாதன் வீட்டுக்குள் நுழைந்தார். தண்ணீருடன் வந்த நல்லைநாதனிடம் செம்பை வாங்கி வைத்துவிட்டு, "உந்த நாற்காலியில் இரு" என்றார்.

"ஐயா, எனது தந்தை எனது திருமணத்திற்கான சகல வேலைகளையும் செய்து முடித்துவிட்டார். ஆனால் பூரணியின் வீட்டார் யாரும் எம்முடன் தொடர்பு கொள்ளவில்லை. அதைப்பற்றி அப்பா கவலை கொள்ளவில்லை. அம்மாதான் கவலைப்படுகிறா. எனது திருமணத்தில் ஏதாவது குழப்பம் வந்து விடுமோ எனப்

பயப்படுகிறா. எனக்குப் பயமில்லை. ஆனால் அம்மா எதைச் சொன்னாலும் கேட்பதாக இல்லை. அப்பா, "நீ பயப்படாதை, சிவன் எம்மோடு இருக்கிறார். அவர் சிவனடியார்களுக்காக எதையும் செய்வார். சிவனடியார்களின் இன்பத்திற்காக அவர் பல வடிவமெடுத்தவர். எனக்குச் சிவானந்தனைப் பிடிக்காது. அவன் பேராசைக்காரன். சிவனை நம்பாதவன். எந்தத் தீயசெயலைச் செய்பவனையும் நம்பலாம். ஆனால் சிவனை நிந்தனை செய்பவனை நம்பக்கூடாது. ஆனால் பூரணி முழுமையான சிவபக்தை; அவளுக்காகத்தான் சிவன் சிவனடியாராக வேடமிட்டு வந்தவர். அதனால் எனது மனம் மாறிவிட்டது. சிவன் உலக நன்மைக்காக ஓரியூரில் சிறுவனாக வந்து பல அற்புதங்களைச் செய்தவர். உலகநன்மைக்காக அவர் எவ்வேடத்தையும் பெறுவார். சிறுவனாக வந்த அவர் அடிமுடியைக் காணாத ஒளிப்பிழம்பாக நின்றவர். அவரை யாராலும் அளவிட முடியாது. அளவிடவோ கணக்கிடவோ உருவகப்படுத்தவோ உவமிக்கப்படவோ முடியாத நுண்ணியன். அதே சமயம் கணக்கிலடங்காத பெரியவன். அவர் துன்பப்படுபவர்களுக்கு உதவவே பல வேடங்களை எடுக்கிறார். அப்படியான சிவன் எமக்கு உதவுவார். இல்லாவிட்டால் செந்தூரனுக்குச் சொல்லிப் பூரணியை அழைத்து வரச் சொல்வோம். அவரது மகன் அப்படித்தானே செய்தவன். அவன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, 'பயப்பட வேண்டாம் மாமா. அப்பா மறுத்தால் நான் எனது தங்கையை அழைத்து வந்து உங்களிடம் ஒப்படைப்பேன் என்றவன். இப்போ அப்பா பூரணியை அழைத்து வா என்கிறார். நான் அவளைப் பார்த்து ரசித்துக் காதல் கொண்டேனே தவிர ஒரு சொல்கூடப் பேசவில்லை. அதனால் என்ன செய்வது என்று கேட்கத்தான் வந்தேன்' என்றான் செந்தூரன்.

"சிவனருளால் யாவும் நல்லபடி முடியும். பூரணன் இன்று இரவு வெளிநாட்டில் இருந்து வருகிறான். அவன் வரட்டும் முடிவெடுப்போம்" என்றார் கதிரேசன்.

**70) பாண்லீர் தன்னில் ஈண்ட இருந்தும்**

**71) தேலூர்த் தென்பால் திகழ் தருதீவில்**

**72) கோ ஆர் கோலம் கொண்ட கொள்கையும்**

"செந்தூரா, சிவன் பல்வேறுபட்ட தோற்றங்களை எடுத்துச் சிவனடியார்களுக்கு அருளுபவன் என்று நம்புபவர்களுக்குத்தான் அதன் தார்ப்பரியம் புரியும். சிவசிந்தனை இல்லாதவர்களுக்குச் சிவன் நேரில் வந்து தரிசனம் கொடுத்தாலும் அவர்கள் யாரோ நாடகத்திற்காக வேடம் போட்டு

வந்துள்ளார் என்றே நினைப்பார்கள். இது அவர்களின் இயல்பு. இயல்பைப் பெரும்பாலும் மாற்ற முடியாது. இது புராண காலத்திலும் நடந்துள்ளது. திருப்பாண்டூர் என்னும் திருத்தலத்தில் சிவபெருமான் எல்லோரும் காணும்படி பிரசன்னமாக இருந்தவர். அப்போது திருத்தேவூர்க்குத் தென்பக்கத்தில் உள்ள தீவிலே பேரழகு பொருந்திய வடிவம் கொண்டு காட்சியளித்தவர். இது பலருக்குத் தெரியாது. ஆணவம் கண்களை மறைத்தால் உண்மை நிலை தெரியாது. பச்சைநிறம் சிவப்பாகத் தெரியும். அதே ஆணவம் மனதில் இருந்தால் சிவனைத் தெரியாது. பேயைத் தான் தெரியும். இது இயல்பு இதை மாற்ற முடியாது. நீ எத்தனை பெண்களைக் கண்டிருப்பாய். அவர்களை உனது மனம் நாடாமைக்குக் காரணம் உனது மனதை நிரப்பியுள்ள சிவன் தனக்குப் பிடித்த பெண்ணை விரும்பப்பண்ணியுள்ளான். இதை உணர்ந்தாயானால் துன்பப்படவோ, கவலைப்படவோ மாட்டாய். உனது தன்தை பூரணியை அழைத்து வா என்று சொல்ல வைத்தவர் சிவன். சிவானந்தனுக்கு விருப்பம். ஆனால் திமிர் விட மறுக்கிறது. காலம் அதைச் சரி செய்யும் கவலைப்படாதே. சிவபக்தரின் மனதில் அன்பும் மகிழ்ச்சியும் தான் இருத்தல் வேண்டும். அதைத்தான் சிவன் விரும்புவார். அன்பும் மகிழ்ச்சியும் தான் சிவன் என்று உணர்ந்தவர்கள் எதற்கும் அஞ்சவோ கவலை கொள்ளவோ மாட்டார்கள்'' என்றார் கதிரேசன்.

**73) தேன்அமர் சோலைத் திருவாரூரின்**

**74) ஞானம் தன்னை நல்கிய நன்மையும்**

செந்தூரான் வெளியே செல்லும் வரை காத்திருந்த சிவானந்தன் அவன் சென்றதும் உள்ளே வந்து கேட்டார்; ''மாசிலாமணியின் மகன் என்ன சொன்னவன்?''

''ஒருவர் சொல்வதை இன்னொருவருக்குச் சொல்லும் பழக்கம் எனக்கு இல்லை. அது தவறான புரிந்து கொள்ளலால் சில சமயம் மாறாத பகையையும் உண்டாக்கும். இந்த விசயத்தில் உன்ரை நிலைப்பாடென்ன?" என்று கேட்டார் கதிரேசன். சிவானந்தன் எதுவும் பேசவில்லை. மகாலிங்கம் சொன்னார்; "சில பெற்றோருக்குப் பிள்ளை காதலிப்பது விருப்பம். நல்ல இடமானாலும் எதிர்ப்பார்கள். எதிர்ப்பு என்பது காதல் என்ற பயிரை வாடவிடாது துளிர்க்கச் செய்யும் நீராகும். உனக்கும் இந்தச் சம்பந்தத்தில் பெரு விருப்பமுண்டு. விருப்பமில்லாதவன் போல நடித்ததால் செந்தூரன் பூரணியை அழைத்துச் செல்வான்" என எதிர்பார்க்கிறாய். அது நடக்காது"

“நீ ஒரு சிவனடியான். மறந்தும் தீயவற்றைக் கதைக்கக்கூடாது. அதை அடிக்கடி உனக்கு நினைவுபடுத்த வேண்டியுள்ளது” என்று கூறிவிட்டுச் சிவானந்தனின் பக்கம் திரும்பிச் சொன்னார்; “நீ திருவாரூருக்குச் சென்று சிவனைத் தரிசிக்க வேண்டும் என்றாய். திருவாரூரிலே நிறையச் சோலைகள் உள்ளன. விதம் விதமான தேன் சிந்தும் மலர்கள் அங்கு பூத்துக் குலுங்குவதால் சோலைகளெங்கும் தேன் அடைகள் உள்ளன. அத்தகைய செழுமை மிகுந்த ஊரில் பள்ளி கொண்டுள்ள சிவன் பரஞானத்தை வாதவூரருக்கும் பல சிவனடியார்க்கும் அருளியவன். நீ அங்கு ஒருமுறை சென்று அவனை தரிசித்து வா உனது மனக்குழப்பங்கள் யாவும் தீரும். அதற்கும் சிவானந்தன் பதில் கூறாது மௌனமாக இருந்தான்.

**75) இடைமருது அதனில் ஈண்ட இருந்தும்**

**76) படிமம் பாதம் வைத்த அப்பரிசும்**

‘‘சிவா, நீ திருவாதவூரில் கோவில் கொண்டிருக்கும் சிவனைத் தரிசித்து விட்டு திருவுடை மருதூரிலே வெளிப்பட்டு தனது புனிதமான பாதத்தை வைத்து பரமனையும் தரிசித்து விட்டு வா. ஏனென்றால் சிவன் தனது திருவடியைப் பதித்த திருக்கோவில் அது. சிவனடியார்கள் சிவனது திருவடி நிழலில் தங்கி இளைப்பாறத்தான் விரும்புவர். அத்துடன் அவனது திருவடியைத் தொழுவோர் தம்மைச் சிவனுக்கு அடிமையாக்கிக் கொள்வர். அடிமைக்கு எந்தவிதமான தீய எண்ணங்களும் உருவாக மாட்டாது. ஏனென்றால் அடிமைக்குச் சுதந்திரமில்லை. எசமானின் கட்டளையை நிறைவேற்றுவதைத் தவிர வேறு சேவைகளில்லை. நினைப்பும் இல்லை. அதனால் நீ அங்கு சென்று சிவனது பாதம் பதிந்த தலத்தை வணங்கு” என்றார் கதிரேசன்.

**77) ஏகம் பத்தில் இயல்பாய் இருந்து**

**78) பாகம் பெண்ணொடு ஆயின பரிசும்**

அன்று பௌர்ணமி தினம். மடத்தில் அடியார்கள் பலர் கூடியிருந்தனர். அன்று விடுமுறையாகையால் ஏராளமான மாணவர்கள் பெற்றோருடன் வந்திருந்தனர். சுந்தரமூர்த்தி சுவாமியார் சிவபூசை செய்துவிட்டு தனது இருப்பிடத்திற்கு வந்தபோது இருவர் அங்கு அமர்ந்திருந்தனர். அவர்கள் சுவாமியாரைக் கண்டதும் எழுந்து வணங்கினர். அவன் சொன்னான்; “சுவாமி நான் அயலூரவன். எனது பெயர் சேனாதிராசா. இவள் எனது மனைவி லட்சுமி. நாம் திருமணம் செய்து எட்டு வருடங்கள் முடிந்துவிட்டன. எமக்குப் பிள்ளைகள்

பிறக்காமையால் கோவில் கோவிலாகச் சென்று வரும் வழியில் இங்கு வந்தோம். எமது பிரச்சினையைத் தயவு செய்து தீர்த்து வையுங்கள்” என்றான்.

சுவாமியார் அவர்களை உள்ளே அழைத்துச் சென்றார். உதவியாளன் அவர்களுக்குக் குடிக்க மோர் கொண்டு வந்து கொடுத்தான். அவர்கள் குடித்ததும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் சொன்னார்; “நீங்கள் சிவபக்தர்கள் என்று உங்களது பேச்சிலிருந்தும் நடையுடைபாவனையில் இருந்தும் கண்டு கொண்டேன். சிவன் பிரபஞ்சமெங்கும் சிவசக்தி சொரூபமாகத்தான் வீற்றிருக்கிறார். அத்துடன் சிவனையும் அம்மையையும் பிரித்துப் பார்க்க முடியாது. உடலும் உயிரும் போன்ற கலப்பு அது. அதனால் காஞ்சியில் இத்தத்துவம் சிறப்புப் பெற்றுள்ளது. அதனால் பிள்ளையில்லாதவர்கள் அங்கு சென்று கல்யாணக்கோலத்தில் இருக்கும் அம்மையையும் சிவனையும் தரிசிக்க வேண்டும். சிவனுக்கும் அம்மைக்கும் திருவாசகத்தில் விருப்பம் அதிகம். அதிலும் சிவபுராணத்தை இருவரும் விரும்புவர். நீங்கள் அங்கு சென்று சில காலம் தங்கிச் சிவனை வழிபடுங்கள். உங்கள் எண்ணம் நிறைவேறும்”.

அதைக்கேட்டு இருவரும் மிக்க மகிழ்ச்சி கொண்டனர்.

**79) திருவாஞ்சியத்தில் சீர்பெற இருந்து**

**80) மருஆர் குழலியொடு மகிழ்ந்த வண்ணமும்**

“அத்துடன் திருவாஞ்சியம் என்ற திருத்தலத்திற்கும் செல்லுங்கள். அத்திருத்தலத்தில் நீண்ட கூந்தலையுடைய உமாதேவியார் மிக்க மகிழ்வுடன் சிவபெருமானுடன் கூடியிருக்கிறார். பிரதோச விரதநாளன்று அங்கு சென்று திருவாசகத்தைப் பாடுங்கள். அத்திருக்கோவிலில் சிவனும் அம்மையும் கூடிக் குலாவி இன்பமாக இருப்பார்கள். எல்லாத் திருத்தலங்களிலும் அவர்கள் இன்பமாகத் தான் இருப்பார்கள். ஆனால் அவர்கள் மிக்க இன்பத்துடன் இருப்பது அத்திருத்தலத்தில் ஒருவரிடம் பல வீடுகள் இருக்கும். அவருக்கு இராசியான வீட்டைத்தான் அவர் விரும்புவார். அதுபோல ஒருவருக்குப் பத்துப் பிள்ளைகள் இருந்தாலும் ஒரு பிள்ளையில் கூடுதலான பாசம் வைத்திருப்பார். இறைவன் கூட அப்படித்தான். எத்தனையோ பூக்கள் இருந்தாலும் இறைவன் விரும்புவது தாமரை. ஏனென்றால் அது மனிதனின் இதயத்தைப் போன்றது. அதற்கு ஒப்பானது. திருமந்திரம் தாமரையைத்தான் சிவனின் இருப்பிடமென்று கூறுகிறது. அதனால் திருவாஞ்சியம் என்ற திருத்தலத்திற்கும் சென்று சிவனைத் தரிசித்து வாருங்கள். உங்கள் எண்ணம் நிறைவேறும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

81) **சேவகன் ஆகித்திண் சிலை ஏந்திப்**

82) **பாவகம் பல பல காட்டிய பரிசும்**

பல திருத்தலங்களுக்கும் சென்று பல விதமான பரிகாரங்களைச் செய்து சிவனை நினைத்துத் திருவாசகம் பாடிக் களைத்த லட்சுமி சுவாமியாரைப் பார்த்தாள். அவளது பார்வையில் ஏக்கம் இருந்தது. இது நடைபெறுமா என்ற சந்தேகமும் இருந்தது. அதை உணர்ந்த சுவாமியார் சொன்னார்; "மகளே துன்பப்படாதே. மகிழ்வுடன் சிவனை வணங்கு. நம்பிக்கையை இழந்தால் துன்பங்கள் தான் தேடி வரும். சிவன் சிவனடியார்களுக்கு உதவ எல்லாச் செயல்களையும் செய்வன். அவன் மார்க்கண்டேயரின் பிறவியை நீடிப்பதற்காக அவரைக் கவர வந்த யமனைக் காலால் உதைத்தவர். எமது வாழ்க்கை வினைப்பயனைப் பொறுத்தே நடைபெறுகிறது. வினைப்படி மார்க்கண்டேயரின் வாழ்க்கை பதினாறு வயதுடன் நிறைவுபெறவேண்டும். யமன் சிவனின் கட்டளையைப் பேணுபவன். அவன் தனக்கிடப்பட்ட கடமையை செய்ய வந்தவன். அவன் சிவனடியான் என்பதால் அவனைக் காக்கச் சிவன் அவனைக் காலால் உதைத்தவர். அத்துடன் மக்களையும், தேவர்களையும் கொடுமைப்படுத்திய அசுரர்களை அழிக்கச் சிவன் போர்வீரன் வேடமிட்டு, வலிமையான வில்லைத் தாங்கி தேவைக்கேற்றபடி பல வடிவங்களை எடுத்து அசுரரை அழித்தவர். அவரது கருணைக்கு அறவே இல்லை. அதனால் நம்பிக்கையுடன் சிவனைத் தொழுங்கள். வினைப்படி உங்களுக்கு பிள்ளைகள் இல்லாவிட்டாலும் அவர் வினையை நீக்கி வரம் அருள்வார் என்றார்.

83) **கடம்பூர் தன்னில் இடம் பெற இருந்தும்**

84) **ஈங்கோய் மலையில் எழில் அது காட்டி**

85) **ஐயாறு அதனில் சைவன் ஆகியும்**

86) **துருந்தி தன்னில் அருத்தியோடு இருந்தும்**

87) **திருப்பனையூரில் விருப்பன் ஆகியும்**

88) **கழுமலம் அதனில் காட்சி கொடுத்தும்**

89) **கழுக்குன்று அதனில் வழுக்காது இருந்தும்**

90) **புறம்பயம் அதனில் அறம்பல அருளியும்**

91) **குற்றாலத்து குறியாய் இருந்தும்**

‘‘சுவாமி, சிவன் ஒருவன். அதுபோல அம்மையும் ஒருத்தி. இருவரும் சேர்ந்துதானே உலகில் உள்ள எல்லாத் திருத்தலங்களிலும் அமர்ந்திருக்கின்றனர். அப்படியிருக்கக் குறிப்பிட்ட சில தலங்களுக்குத்தானே செல்லச் சொல்கிறீர்கள்’’ என்று கேட்டார் சேனாதிராசா.

“மகனே நீ கேட்டது சரி. மாணிக்கவாசகர் காலத்தில் அவர் கேள்விப்பட்டவற்றைப் பாடியுள்ளார். சிவன் சிவனடியார்கள் கூடியிருக்கும் சிவத்தலங்களை அதிகமாக விரும்புவான். அத்துடன் அவ்வூரவர் பக்தியில் சிறந்தவர்களாக இருந்திருக்கூடும். அதனால் அவர்களுக்கு அங்கு அருளி இருக்கலாம். ஒரு பட்டணத்தில் பல சோதிடர்கள் இருந்து சோதிடம் பார்ப்பார்கள். கிராமங்களில் இருந்து வருவோரில் சிலர் புளியமரத்தின்கீழ் இருந்து சொல்பவர் தான் உண்மையான சோதிடர் என நம்புகின்றனர். அதற்குக் காரணம் அவர் கூறியது அக்கிராமத்தவர்களுக்கு நடந்திருக்கலாம். திருக்கடம்பூர், திருவீங்கோய் மலை, திருவையாறு ஆகிய திருத்தலங்களில் சிவன் பல்வேறு தோற்றங்களுடன் எழுந்தருளியிருக்கிறார். அங்குள்ள சிவனடியார்கள் பக்தி மிகுதியால் சிவனது பல அவதாரங்களைக் கல்லில் செதுக்கி வைத்திருக்கின்றனர். அவற்றைப் பார்க்க விரும்புவோர் அங்கு தான் செல்ல வேண்டும். திருத்துருத்தி, திருப்பனையூர் ஆகிய திருக்கோவில்களில் சிவன் மகிழ்வுடன் இருக்கிறாராம். அதற்குக் காரணம் சிவசேவை அங்கு நன்கு நடைபெறுகிறது. சிவனடியார்கள் முறைப்படி திருமுறைகளைப் பாடிப் பணிந்திருக்கலாம். சீர்காழி, திருக்கழுக்குன்று ஆகிய இடங்களில் சிவனை எந்நேரமும் காணக்கூடியதாக இருந்திருக்கலாம். அதனால்தான் மாணிக்கவாசகர் அவ்வாறு பாடியிருக்கிறார். திருப்புறம்பலம் என்ற பதியில் சிவன் அறநூல்களைச் செய்தருளியுள்ளான். அங்கு சிவபக்திமிக்கவர்கள் இருந்திருக்கலாம். அவர்களுக்குச் சிவன் உபதேசமும் செய்திருக்கலாம். அதனால் அவர்கள் பல அறநூல்களை எழுதியிருக்கலாம். திருக்குற்றாலத்தில் சிவன் பிரத்தியட்சமாக எழுந்தருளியிருப்பதாக மாணிக்கவாசகர் கூறுகிறார். ஒவ்வொருவரும் சிவனை ஒவ்வொரு கோலத்தில் கண்டிருப்பர். அவற்றைப் பாடியும் இருப்பர். அவற்றைப் படித்த மாணிக்கவாசகர் அவற்றைத் தனது திருவாசகத்தில் குறிப்பிட்டுள்ளவர். அதனால்தான் நான் சொன்னேன். நீ சொல்வது போலச் சிவனும் அம்மையும் ஒருவரே. அவர் எங்கிருந்தாலும் தனது அடியார்களின் குறைகளை நீக்குவார். துன்பங்களைப் போக்குவார். எனினும் சிலர் அங்கு சென்றால்தான் அருள் கிடைக்கும் என நம்புகின்றனர். அவர்களது நம்பிக்கையைக் கெடுக்கக்கூடாது. வசதியானவர்கள் சென்று வரட்டும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**92) அந்தம் இல் பெருமை அழல் உருக் கரந்து**

**93)** **சுந்தர வேடத்து ஒரு முதல் உருவு கொண்டு**

**94)** **இந்திர ஞாலம் போல வந்தருளி**

**95)** **எவ்எவர் தன்மையும் தன்வயின் படுத்துத்**

**96)** **தானே ஆகிய தயாபரன் எம்இறை**

''சுவாமி, எண்ணிறைந்த பெருமைகளை உடைய சிவனைப் பற்றி நான் கேட்டது பிழையா…? சில சமயங்களில் இப்படியான சந்தேகங்கள் என் மனதில் உருவாகின்றன. அதனால் தான் சிவன் அருளுகிறாரில்லை என்று எனது மனைவி கூறுகிறாள். அது உண்மையாக இருக்குமோ…? இப்படியான எண்ணங்கள் வராமல் தடுப்பது எப்படி…?'' சேனாதிராசா கேட்டான்.

''மகனே, சிவனின் அருட்செயல்களை மாயவித்தை என்றுதான் பலரும் முதலில் நினைக்கின்றனர். சிவனின்மீது நம்பிக்கை வைத்து அவனை வணங்க வணங்கச் சந்தேகங்கள் வரும். அதை விலக்கினால் சிவனின் அருள் கிடைக்கும். உனக்கு வந்ததுபோலத்தான் எனக்கும் இளமைக்காலத்தில் வந்தது. திருவாசகத்தைப் படித்தேன். அதில் உலக அழிவான பிரளயத்தின் பின் படைப்பு நிகழ்ந்தபோது சிவன் பொன்போன்ற நிறத்தவனாக இருந்தவன். பின்பு முக்குணபேதத்தால் எண்ணிறைந்த அழகான வடிவங்களைச் சிவன் எடுத்தவன். பின் தனது மாயாசக்தியால் உலகம் முழுவதையும் தோற்றுவித்தவன். பல்வேறுபட்ட உயிரினங்கள் யாவும் அவனிடமிருந்தே வந்தவை. சிவனே, நீ உனது அருட்சக்தியால் தான் இவற்றையெல்லாம் தோற்றுவித்தாய் என்று மாணிக்கவாசகர் கூறுகிறார். இவற்றை நான் நம்பாது எனது குருவிடம் சொன்னேன். அவர் சொன்னார்; 'மகனே, உனக்கு மனப்பக்குவம் ஏற்படவில்லை. அதனால்தான் நினைக்கக்கூடாதவற்றையெல்லாம் நினைக்கிறாய். அதனால் வீட்டுக்குச் செல். வீணாக ஒரு நிமிடத்தைத் தன்னும் கழிக்கக் கூடாது' என்றார். எனக்கு அவற்றை அறிந்து கொள்ள வேண்டும் என்ற விருப்பத்தால் தான் கேட்டேன். ஒரு மாணவன் தனது சந்தேகங்களைக் குருவிடம் தானே கேட்டு விளக்கம் பெற வேண்டும்'' என்றேன். அதை அவர் ஏற்றுக் கொண்டார். பின், ''சந்தேகம்தான் புதிருக்கு விளக்கமளிக்கும். சந்தேகப்பட்டவர்கள்தான் புதியவற்றைக் கண்டு பிடித்தனர். இப்போ உனக்குச் சந்தேகப்படும் வயதல்ல. அதனால் சிவநினைவோடு நம்பிக்கைவை. கற்று முடிந்ததும் யாவும் விளங்கும்'' என்றார். அது உண்மை. சந்தேகம் தகவல்களைத் திரட்டி உண்மையை உணரவைக்கும். அதனால் எதைப்பற்றியும் சிந்திக்காது உனது செயலைச் செய்

என்றவர்'' இப்போது எனது சந்தேகங்கள் யாவும் நீங்கியமையால் சிவனைப் பற்றிய பெருமைகளை உணர்ந்து கொண்டேன். அதனால் சிவனடியார்களின் சந்தேகங்களை நீக்கி அவர்களுக்கு வழிகாட்டுகிறேன். நீயும் உனது சந்தேகங்களை நீக்கி பற்றற்ற மனதுடன் சிவனை இங்கிருந்தென்றாலும் வேண்டு, நீ நினைத்தது நடக்கும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

''சுவாமி உங்கள் சொற்படி நடப்பேன். நான் இங்கிருந்த படியே இங்குள்ள சிவனைப் போற்றப் போகிறேன்'' என்றார் சேனாதிராசா.

**97) சந்திர தீபத்துச் சாத்திரன் ஆகி**

**98) சுந்தரத்து இழித்து வந்து அழகு அமர் பாலையுள்**

**99) சுந்தரத் தன்மையோடு துதைத்து இருந்தருளியும்**

''சேனாதிராசா, நீயும் உனது மனைவியும் இங்குள்ள மடத்தில் தங்கியிருக்கலாம். அதனால் அவ்வப்போது உனது மனதில் எழும் சந்தேகங்களையும் நீக்கிக் கொள்ளலாம். சிவன் சந்திரதீபம் என்ற திருத்தலத்தில் இருந்து அடியவர்களுக்குச் சாத்திரம் சொன்னவன். அங்கு அவனைச் சாத்திரியாகவே மக்கள் நினைத்தனர். வீடுகளுக்கு அழைத்துச் சென்று வீட்டு நிலையம் எடுப்பித்தனர். அவன் மக்களோடு மக்களாக இருந்தவன். அதைவிட வானவீதி வழியாக வந்து பாலை என்ற திருத்தலத்தில் அமர்ந்து கொண்டவன். அங்கு அவன் பேரழகனாகவே இருந்தான். இப்படிப் பல கதைகள் உண்டு. சிவன் எப்படிச் சாத்திரியாக வந்தவன் என்று சிலர் கேட்கின்றனர். நீ சிவன் சாத்திரியாக வந்ததை நம்புகிறாயா....? அவன் பேரழகுடன் வானவீதி வழியாக வந்ததை நம்புகிறாயா....?" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகள் கேட்டார்.

கேட்டவுடனேயே, "நான் நம்புகிறேன். எனது சந்தேகம் நீங்கிவிட்டது. எனக்கு இனி மகன் பிறப்பான் என்ற நம்பிக்கையும் வந்து விட்டது'' என்றான் சேனாதிராசா.

''இவர் எனது கரைச்சலுக்காக வந்தவரே தவிர இவருக்கு விருப்பமில்லை. ஊரில் ஏராளமான வயல்கள் உண்டு. தென்னந்தோட்டம் உண்டு. பசுக்கள் உண்டு. கோவில்களில் இருக்கும்போது அவருக்கு அந்த நினைவுதான்

வரும். அவற்றைப் பராமரிக்க ஏராளமான தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இவரின் தந்தையும், தாயும் திடகாத்திரமாக இருக்கிறார்கள். இவர்தான் ஒரே பிள்ளை. இவருக்குப் பிள்ளை பிறக்காவிட்டால் தமது சந்ததி அழிந்துவிடும் என்பதற்காகத்தான் இவரை வற்புறுத்தி அனுப்பினார்கள். ஆனால் இவரின் மனம் போராடிக் கொண்டே இருந்தது. அதனால் தான் எமக்குப் பிள்ளை பிறக்கவில்லை'' என்றாள் லட்சுமி.

''மகனே, உனக்குப் போதிய சொத்திருக்கிறது. அதைப் பராமரிக்க உனது பெற்றோர் இருக்கின்றனர். அதனால் வீணான எண்ணங்களை விட்டுவிட்டு முழு மனதுடன் சிவனை ஆராதி. விரைவில் பயன் கிடைக்கும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**100) மந்தர மாமலை மகேந்திர வெற்பன்**

**101) அந்தம் இல் பெருமை அருள் உடை அண்ணல்**

**102) எம் தமை ஆண்ட பரிச அது பகரின்**

''சுவாமி, எனக்குச் சிவன்மீது முழுமையான அன்பிருக்கிறது. நம்பிக்கை இருக்கிறது. எனது தந்தை சிவனடியார். இவர் சிவனில் அன்பில்லாதவர். நம்பிக்கை இல்லாதவர். நான் இவரை விரும்பித்தான் திருமணம் செய்தேன். பாடசாலையில் ஒன்றாகக் கற்றபோது என்னை மயக்குவதற்காக சிவவேடம் போடுவார். எனக்கு இவரை விருப்பமில்லை. அதைத் தெரிவித்த பின்புதான் சிவனை வணங்குவதாகக் கூறி என்னை ஏமாற்றினார். போலி வேடதாரியானாலும் பிழைப்புக்காகத் திருநீறு அணிந்து சிவபுராணத்தைச் சொல்லி சோதிடம் சொல்பவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களை விடக் கேவலமானவர் இவர். ஆனால் நான் மனமுருகித் தொழுகிறேன். முதலில் இவரின் சிந்தனையை மாற்று. அதன்பின் எனக்குக் குழந்தையைத் தா என்றுதான் கேட்டேன். சிவசிந்தனையில்லாது குழந்தையைப் பெற்றால் அது சிவசிந்தனை இல்லாத குழந்தையாகிவிடும். இப்போ இங்கு வந்தபின் அவரது மனநிலையில் மாற்றம் தென்படுகிறது. வேதங்களின் உட்பொருளை விளக்குவதற்கு இடமாக இருந்த மகேந்திரமலையில் கோவில் கொண்டிருக்கும் சிவன், எண்ணிறைந்த வீபூதிகளையும் (தோற்றங்களை) அருட்சக்தியையும் தன்னகத்தே கொண்டவன். அவன் என்னை ஆட்கொண்டருள்வான் என்று எனக்குத் தெரியும். நான் சிவனின் அடியவன். அவரைப்பற்றி எழுதப்பட்ட நூல்களையெல்லாம் நான் கற்றுள்ளேன். திருவாசகத்தில் சிவபுராணம் சிவனுக்கும் அம்மைக்கும் விருப்பமானது. அதைத்

தினமும் காலையும் மாலையும் இசையுடன் பொருளை உணர்ந்து பாடி வருகிறேன். இங்கிருந்து செல்லும்போது தாயாகத் தான் செல்வேன்'' என்று உணர்ச்சி வசப்பட்டார் லட்சுமி.

**103) அகற்றல் அது உடை அழகு அமர் திருஉரு**

**104) நீற்றுக் கோடி நிமிர்ந்து காட்டியும்**

''சுவாமி, எனது தாயாரின் சகோதரன் ஒரு பூசாரி. வைரவரை ஆதரிப்பவன். அவன் தனது மகளை நான் திருமணம் செய்யவில்லை என்று என்னை அடிக்கடி பயமுறுத்துவான். தேசிக்காயை வெட்டி அதில் குங்குமத்தைத் தடவி வெற்றிலையில் கறுப்புமை பூசி எமது வீட்டுப் படலையடியிலும், தோப்பிலும் போடுவான். அவன் என்னைப் பழிவாங்காமல் விடமாட்டேனென்று கூறி வைரவருக்குப் பலியும் கொடுப்பான். அவன்தான் எனக்குப் பிள்ளை பிறக்கக்கூடாதென்று செய்வினை செய்தானோ தெரியவில்லை" என்றான் சேனாதிராசா.

"மகனே, சிவனை நம்புபவன் எந்தப் பேய் பிசாசுக்கும், முனி சாத்தான் என்பவற்றிற்கும் பயப்பட மாட்டான். சிவனைத் தவிர வேறு எவராலும் எவையும் செய்ய முடியாது. ஏனெனில் உலகில் நடப்பவை அனைத்திற்கும் காரணகர்த்தா சிவன். அவனை அறியாமல் எதுவும் நடவாது. ஓர் உயிரை அழிக்கவோ அல்லது ஆக்கவோ யாராலும் முடியாது. அதை செய்யக்கூடியவர் சிவன். சைவசித்தாந்தப்படி ஓர் உயிர் உடலை விட்டகன்றதும் சிவனின் கட்டளைப்படி அது கர்ப்பப்பைக்குள் வினைக்கேற்பச் சென்றுவிடும். அதனால் உயிர்பேயாய் அலைகிறது. அது சாந்தியடையவில்லை என்று கூறுவதெல்லாம் பொய்யானவை. சிவனை நம்பு சர்வ சக்திமானான சிவன் விரும்பி அணியும் திருநீற்று வரிகளால் சிவன் அழகு பெறுகிறான். அத்திருநீற்றை அணிபவர்களை நெருங்க யமன்கூட அஞ்சுவான். நீ எந்நேரமும் நீற்றை அணி. அதனால் உனக்குண்டான பயம் நீங்கும்" என்று கூறியபோது லட்சுமி சொன்னாள்; "இதைத்தான் சுவாமி நான் தினமும் சொல்வேன். இவர் அதை நம்புவதில்லை. எனது தந்தை எச் செயலைச் செய்யு முன்பும் முகம், கை, கால்களைக் கழுவி நீறு அணிந்த பின்னரே செய்வார். அதனால் அவர் நள்ளிரவிலும் சுடலைக்குத் தனித்துச் சென்று வருவார். பேய், பிசாசு, செய்வினை, சூனியம் என்பதெல்லாம் பொய். அப்படிச் செய்யலாமென்றால் சிவனைவிட அச்செயல்களைச் செய்வோர்கள் உயர்ந்தவர்களாகி விடுவார்கள்"

“உண்மை, சேனாதிராசா, உனக்கு அறிவுமிக்க ஒரு மனைவியைச் சிவன் தந்துள்ளான். அதனால் அவள் சொல்வதைக் கேள்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**105) ஊனம் தன்னை ஒருங்கு உடன் அறுக்கும்**

**106) ஆனந்தம்மே ஆறா அருளியும்**

''மகனே, இன்பம் வந்து சேர்ந்தால் துன்பங்கள் மறைகின்றன. அது சிவன் தரும் இன்பமாக இருந்தால் பிறப்பில் ஏற்பட இருக்கின்ற அனைத்துத் துன்பங்களையும், நீக்கிப் பேரின்பமான சிவனது திருவடியை அடையச் செய்யும். மகிழ்வும் அன்பும் தான் சிவம். அன்பில் இருந்துதான் சகல சுகபோகங்களும் வந்தடைகின்றன. சிவபெருமான் சிவனடியார்க்கு எஞ்சு வினையாலும் செய்யும் வினையாலும் வந்தடையும் கேடுகளை அறவே அகற்றுவான். அதனால் உண்டாகும் பேரின்பத்தை எனக்குக் கொடுத்தருள்வாயாக என்று மாணிக்கவாசகர் சிவனைக் கேட்கிறார். இதை யாரும் கேட்கலாம். கேடும் துன்பமும் அவரவர்களால்தான் அவரவர்களுக்கு வந்து சேருகிறது. பொதுவாக எதிரிகள் என்று சொல்லப்படுபவர்கள் உற்ற உறவினர்களும் நண்பர்களுமே. சேனாதிராசா உன்னைக் காதலித்தது தவறல்ல. முன்வினை ஏதோ ஒரு காரணமில்லாமல் இருவர் சேரமுடியாது. முன்வினை. நன்மை தருவதாக இருந்தால் இன்பமான வாழ்வும் கிடைக்கும். நீ முன்னைய வாழ்வில் புண்ணியம் செய்தமையால் நல்ல மனைவி, நல்ல பெற்றோர், கைநிறையப் பணம் என்பன கிடைத்துள்ளன. அதை ஏன் வீணான கற்பனைகள் மூலம் கெடுக்கிறாய். அமைதியாக இரு. சிவனை நம்பு. பிள்ளையைச் சிவன் தருவான் என்று நினை. அந்த எண்ணம் உனது துயரங்களையெல்லாம் அகற்றும். நம்பிக்கையோடும் மகிழ்வோடும் செயற்பட்டால்தான் காரியம் சித்தியாகும். அதை உனது மனைவி புரிந்து வைத்துள்ளாள். அவளைக் காதலித்துத் திருமணம் செய்த நீ ஏன் அவளைப் புரிந்து கொள்ள மறுக்கிறாய். புரிந்து கொள்ளல்தான் நிம்மதியையும் மகிழ்ச்சியையும் தரும். சந்தேகத்துடனும் நம்பிக்கையின்றியும் செய்யப்படும் செயல்கள் வெற்றியளிக்காதென்பதை இப்போது நீ புரிந்திருப்பாய். கடந்த சில மாதங்களாகக் கோவில் கோவிலாக அலைகிறாயே தவிர பற்றுவைக்கவில்லை. ஒரு செயலில் பற்று வைப்பது வேறு. ஆசைப்படுவது வேறு. ஆசை துன்பங்களை வரவழைக்கும். பற்று மகிழ்ச்சியைத் தரும். பற்றுடன் செய்யப்படும் செயல்கள் தான் இறைவனின் அருளால் நிறைவுபெறும். ஆகையால் சிவனின்மீது நம்பிக்கை வை. அது பற்றாக மாறி அன்பாகப் பரிணமிக்கும்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**107) மாதில் கூறு உடைய மாப்பொருள் கருணையன்**

**108) நாதம் பெரும் பறை நவின்று கறங்கவும்**

“மகனே, மாணிக்கவாசகர் பாடிய திருவாசகத்திற்கு நிகரான நூல் வேறு எதுவும் இல்லை. அதனால் அவரைச் சுவாமி என்று அழைக்கின்றனர். வாழ்வில் ஏற்படும் துன்பங்களை ஆனந்தத்தால் விரட்டுங்கள். ஆனந்தம் தான் சிவன். அந்த ஆனந்தத்தில் இருந்துதான் உயிர்கள் தோன்றின. பிறந்தவைநெல்லாம் ஆனந்தப்பட்டால்தான் இன்பமாக வாழமுடியும். இறுதியிலும் ஆனந்தத்திலே வாழச் சிவனது திருவடியை அடைய வேண்டும். இவ்வாறு மாணிக்கவாசகர் கூறுகிறார். உனது நடத்தை, பேச்சிலிருந்து நீ லட்சுமியுடன் ஆனந்தமாக வாழவில்லை என்று தெரிகிறது. உனது தாய்மாமன் அடிக்கடி அச்சுறுத்துவதால் நீ காரணமின்றிப் பயப்படுகிறாய். பயமும், சந்தேகமும், நம்பிக்கையின்மையும் ஆனந்தத்தை இல்லாமற் செய்யும் காரணிகளாகும். நீ எந்தவிதமான பயமும் இன்றிச் சிவன்மீது நம்பிக்கை வைத்து உனது மனைவியுடன் ஆனந்தமாக இரு. அந்த ஆனந்தம் உனக்குப் பிள்ளையைத் தரும். சிவனை நம்பியவன் யமனுக்குக்கூடப் பயப்படமாட்டான். நீ ஒரு குடிகார, ஒழுக்கமில்லாத மாமனின் செயல்களுக்குப் பயப்படுகிறாய். கொடிய அரக்கர்களை அழித்துச் சிவனடியார்களைக் காத்து ஆனந்தமளித்த சிவன் உனது அணுவைவிடச் சிறிய பிரச்சினையைத் தீர்க்கமாட்டானா…? சிவமிருக்கப் பயமேன் என்று நினை. தவறிப் பயமேற்பட்டால் ஐந்தெழுத்தை ஓது. அது பயத்தை நீக்கி உரமான மனதை உண்டாக்கும். சிவன் அம்மையைத் தனது உடலின் இடப்பாகத்தில் பிரிப்பின்றி வைத்திருப்பதால் சகல உயிர்களையும் பால் வேறுபாடின்றி அறிந்து பாதுகாப்பான். அதனால்தான் அவன் மிக்க கருணை உள்ளவனாக இருக்கிறான். அவன் நாதப் பிரமமாக இருப்பதால் அவன் எல்லாவற்றையும் அறிந்து கொள்கிறான். எதுவும் தனித்து இயங்க முடியாது. சாதாரண ஒரு மனித உயிர் பலருடன் சேர்ந்தே வாழ்கிறது. பொருட்களும் அப்படித்தான். களிமண்ணால் மட்டும் பானையைச் செய்ய முடியாது. அதற்கு நீரும், குயவனும் மற்றும் உபகரணங்களும் வேண்டும். அதுபோன்றதுதான் எல்லாச் செயல்களும். மனிதன் ஆனந்தமாக வாழச் சிவன் எல்லா வகையிலும் உதவி செய்கிறார் என்று நினைப்பவனுக்கு ஆனந்தத்திற்குக் குறைவு உண்டாகாது” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**109) அழுக்கு அடையாமல் ஆண்டு கொண்டருள்பவன்**

## 110) கழுக்கடை தன்னைக் கைக் கொண்டருளியும்

அப்போது தாமோதரன் என்ற சிவனடியானும் அவனது மனைவியும் குழந்தையும் ஆச்சிரமத்திற்கு வந்து சுந்தரமூர்த்தி சுவாமிகளை வணங்கினர். அப்போது சுந்தரமூர்த்தி சுவாமிகள் சொன்னார்; "சேனாதிராசா, சிவன் தான் தாமோதரனையும் கௌசல்யாவையும் மகேசனையும் இங்கே அனுப்பியிருக்கிறார். உன்னைப் போலத்தான் தாமோதரனும், அவனுக்குச் சிவனில் நம்பிக்கை இல்லை. தகப்பன் பெரிய வியாபாரி. பணத்திற்குத் தட்டுப்பாடு இல்லை. தாமோதரனும் வர்த்தகன். அவன் சிவன் கோவிலுக்கு வணங்க வந்த கௌசல்யாவைக் காதலித்துத் திருமணம் செய்தவன். திருமணம் முடித்து பத்து வருடங்களாகியும் பிள்ளை பிறக்காததால் தாதேமாதரனின் பெற்றோர் அவனுக்கு இன்னொரு திருமணம் செய்ய முயற்சித்தனர். தீய குணங்கள் பலவும் கொண்ட தாமோதரன் மனைவி மீது இருந்த காதலால் அதற்குச் சம்மதிக்கவில்லை. ஒரு நாள் அவனது பெற்றோர் அவனையும் கௌசல்யாவையும் ஆச்சிரமத்திற்கு அழைத்து வந்தனர். அவர்களது நோக்கம் தாமோதரனுக்கு இன்னொரு திருமணம் செய்து வைப்பதேயாகும். நான் அவர்களுக்குச் சொன்னேன்; "பெரியவரே நீங்களும் மனைவியும் சிவபக்தர்கள். சிவனை நம்பாது முடிவை எடுக்கலாமா…? உங்களுக்கு இயல்பாகவே ஏழை என்பதால் கௌசல்யாவைப் பிடிக்காது. அவள் சிவனின் அடியவள். அதனால் அவளைப் பிரிக்க முடியாது. சிவனை நம்பிக்கையுடன் கேளுங்கள். உங்களை மும்மலங்களும் மூடியுள்ளன. அவை உங்களைச் சிந்திக்க விடுவதில்லை. உங்களது மகளுக்கு இப்படியானதொரு நிலை வந்தால் அப்படிச் சொல்வீர்களா…? உங்களது மகன் குடிப்பவன். குடி எல்லாப் பாவங்களையும் செய்ய வைக்கும். அவன் இரவு பத்துமணிவரை வியாபாரத்தைக் கவனித்துவிட்டு அதன்பின் குடித்துவிட்டு நடுச்சாம வேளையில் வந்து குடும்பம் நடாத்த முடியுமா…? பிள்ளையைப் பெற வேண்டுமானால் இருவரும் மிக்க மகிழ்வுடன் வாழ வேண்டும். மகிழ்வுடன் சிவனை வணங்க வேண்டும். மகிழ்வுடன் கூடுதல் வேண்டும். முதலில் மலங்களை அகற்றுங்கள். அதை அகற்றுபவர் சிவன். அவன் திரிசூலத்தைக் கையில் தாங்கியிருப்பது உயிர்களைப் பக்குவப்படுத்தவே. அதனால் தூய்மையான மனதுடன் சிவனை வணங்குங்கள்" என்றேன். தாமோதரன் அதன்பின் திருந்திச் சிவனை வழிபட ஆரம்பித்தான். இப்போது மூன்று பிள்ளைகளின் தந்தை அவன். தாமோதரனைப் போல மனம் திருந்த வேண்டும். சேனாதிராசா நேற்று மடத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்குப் பணம் கொடுத்து மது வாங்கியுள்ளான். புனிதமான ஆச்சிரமத்தை மதியாதவனானான். திரிசூலம் இச்சாசக்தி, ஞானாசக்தி, கிரியாசக்தியாகிய முச்சக்திகளின் புறச்சின்னமாகும். உயிர்களின் பக்குவத்தை

அறிந்து உயிர்கள் சிவசொரூபமாவதற்கு இவை உதவி செய்கின்றன. அதனால் உடல் சுத்தமும் மனச்சுத்தமும் இருந்தால்தான் சிவனருள் கிட்டும். தாமோதரன் இன்று பெரும் சிவபக்தன். அவனோடு கதைத்து உனது நிலையை மாற்று" என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

**111) மூலம் ஆகிய மும்மலம் அறுக்கும்**

**112) தூய மேனிச் சுடர்விடு சோதி**

**113) காதலன் ஆகிக் கழுநீர் மாலை**

**114) ஏல் உடைத்து ஆக எழில்பெற அணிந்தும்**

தாமோதரன் மடத்தின் வடக்குப் பக்கத்தில் நின்ற வேப்பமரத்தடிக்குச் சேனாதிராஜாவை அழைத்துச் சென்றான். வேப்பமரத்தின் கீழ் ஒரு சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது. பலர் வந்து பூக்களை வைத்து வணங்கினர். தாமோதரன் பூஞ்சோலைக்குச் சென்று அழகான சில பூக்களைப் பறித்து வந்து சேனாதிராசாவிடம் கொடுத்துவிட்டுச் சொன்னான்; "உன்னை எனக்குத் தெரியாது. அதுபோல என்னையும் உனக்குத் தெரியாது. முதலில் மனதைச் சுத்தப்படுத்து. பின் கிணற்றடிக்குச் சென்று உடலைச் சுத்தப்படுத்து. அதன்பின் இப்பூக்களைச் சிவனுக்குச் சமர்ப்பித்து உனது குறைகளை அவனுக்குச் சொல். நம்பிக்கையும் சுத்தமும் தான் வேண்டுகோளை நிறைவேற்றும். அதனால் குடிக்காதே, நம்பிக்கை வை" என்று சொல்லச் சேனாதிராஜா பூக்களை வாங்கிக் கொண்டு கிணற்றடிக்குச் சென்று அதைக் கழுவினான். பின் தன்னைச் சுத்தப்படுத்திக் கொண்டு வந்து பூக்களைச் சிவனுக்குச் சமர்ப்பித்தான். கண்களை மூடிச் சிவனை வணங்கினான். பின் தாமோதரனின் அருகில் வந்தான்.

"ஐயா, கடவுளை வணங்கும்போது கண்களை மூடக்கூடாது. சிவனை நன்றாகப் பார்த்து, ரசித்து வணங்க வேண்டும். அப்போதுதான் சிவனின் அருள் கண்களூடாக மனதிற்குச் செல்லும். சிவன் ஞானப்பிரகாசன். அவனது பிரகாசமான ஒளி அறியாமையை அகற்றும். மல இருளையும் அகற்றும். அதனால் மனம் சுத்தமடையும். அத்துடன் மனம் மகிழ்வும் அடையும். மனதை ஆட்டிப் படைப்பதும், நல்லவற்றை மறைப்பதும் மலங்கள். அவை அகல வேண்டுமானால் சிவதரிசனம் கிடைக்க வேண்டும். வணங்கும்போது தீபங்கள் காட்டுவார்கள். அவ் ஒளியில் பேரொளி படைத்தவரான சிவனைக் கண்குளிரப் பார்த்தால்தான் மனம் குளிரும். மனம் குளிர்ந்தால் மலம் அகலும். சிவன் உயிர்களின் மணாளன். அவன் செங்கழுநீர்ப்பூவாலான மாலையை எவ்வேளையிலும் அணிந்து கொண்டு மிக்க அழகாக அடியார்களுக்குக் காட்சி கொடுக்கிறான். அந்த அரிய காட்சியைக் கண்குளிரக் காணாது கண்களை

முடினால் சிவனது அருளொளி எவ்வாறு கிடைக்கும். கண் விழிப்படைந்தால் மனமும் விழிப்படையும். விழிப்படைதல் என்பது சுத்தமாகுதல். கண் சுத்தமானால் தீய காட்சிகளைப் பாராது. மனம் சுத்தமானால் தீயவற்றை எண்ணாது. அதற்காகத் தான் சிவனைக் கண்குளிரப் பார்க்க வேண்டும் என்று சுவாமியார் சொல்வார்" என்றான் தாமோதரன்.

**115) அரியொடு பிரமற்கு அளவு அறியாதவன்**

**116) பரிமாவின் மிசைப் பயின்ற வண்ணமும்**

தாமோதரன் சொன்னான்; "சிவன் அற்புதமானவர். அதிசயமானவர். அதனால் தான் பிரமாவாலும் விஷ்ணுவாலும் அறிய முடியாமல் போனது. இவர்கள் மலத்தால் பீடிக்கப்பட்டமையால் சீவவியத்தி என்னும் கீழ்நிலைக்கு இறங்கி வந்தார்கள். அதனால் இவர்களது செயற்பாட்டுக்கு ஓர் எல்லை உண்டு. அதனால் எல்லை கடந்த பொருளான சிவனை இவர்களால் அறிந்து கொள்ள முடியாது. அதனால் மற்றவர்களாலும் சிவனை அறிந்து கொள்ள முடியாது. அதனால்தான் போலும் மாணிக்கவாசகர் தன்னாலும் அறிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் நீ பல தடவைகளில் குதிரையின் மீது பவனிவந்து உன்னை எனக்கு விளக்கியருளியுள்ளாய் என்கிறார். மனிதப் பிறவியும் இப்பூவுலகும் இறைவனின் அரிய படைப்புக்களாகும். ஒழுக்கமான வாழ்வும், இறை பக்தியும் மனிதனைத் தேவனைவிட உயர்ந்த நிலைக்கு அழைத்துச் செல்லும். நிறைந்த பக்தியுள்ள ஓர் உயிர் சிவனது திருவடி நிலையை அடைந்து பிறப்புக்களை அறுத்துப் பேரின்பமாக வாழும். இந்தநிலை எந்தத் தேவர்களுக்கும் இல்லை. அதுபோல எந்தத் தேவரானாலும் பூமிக்கு வந்துதான் தவம் செய்து மேல்நிலையை அடைதல் வேண்டும். இதற்கு அம்மையே சிறந்த உதாரணமாவாள். அதனால் கிடைத்தற்கரிய மானிடப் பிறப்பைத் தீயவழியில் வாழ்ந்து வினையை அதிகரிக்கச் செய்யாது சிவனை அடைதலை நோக்காகக் கொண்டு நல்லபடி வாழுதல் வேண்டும். இந்த ஆச்சிரமச் சூழலும், சுவாமியாரும், இங்குள்ள பெரியவர்களும் உன் ஈடேற்றத்திற்குத் தம்மாலான உதவிகளைச் செய்வார்கள். வீணான எண்ணங்களை விட்டுவிட்டுச் சிவனை நினை. உனக்கு ஒன்றல்ல ஐந்து பிள்ளைகள் பிறக்கும்" என்றார் சேனாதிராசா.

**117) மீண்டு வராவழி அருள் புரிபவன்**

**118) பாண்டி நாடே பாழம்பதி ஆகவும்**

‘‘மீண்டும் மீண்டும் பிறப்பெடுத்தல், பிறப்பெடுக்காது சிவனோடு சேரும் நிலை, பாவம் புண்ணியம் இவையெல்லாம் இருக்கென்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை’’ என்றான் சேனாதிராசா.

அதைக் கேட்ட தாமோதரன் உடனே எதுவும் சொல்லவில்லை. சிறிது நேரத்தின் பின் சொன்னான்; “தேவையில்லாவற்றை மனதில் புகுத்திக் கொள்வதால்தான் பிரச்சினைகள், துன்பங்கள் வருகின்றன. இவற்றைப் பற்றியெல்லாம் ஏன் நினைக்கிறீர்கள். உனக்கு வேண்டியவற்றை மட்டும் நினை. ஒருவன் பசியால் துடித்தால் அவன் உண்ண உணவு தேடுவானே தவிரப் பொன் பொருளைத் தேடமாட்டான். உனக்கு உடனடியாகத் தேவையானது ஒரு பிள்ளை. அதற்கான செயல்களில் இறங்கு. அதைப்பற்றியே நினை. எதிர்பாராத நிகழ்வுகள் பலவும் எம் கண்முன்னே நடைபெறுகின்றன. நேற்று எம்மூரவர் ஒருவர் படுத்தவர் எழவில்லை. நாற்பது வயதுகூட நிரம்பாதவர் அவர் எப்படி இறந்தார் என்று யாருக்கும் புரியவில்லை. காற்று வீசுகிறது, அதைக் கண்களால் கண்டவர் யார். நறுமணம் வீசுகிறது என்கிறோம். எதைவைத்து அதைச் சொல்கிறோம். ஒரு உணர்வு தானே. கண்ணால் கண்டவைதான் மெய் என்றால் எத்தனையோ விடயங்கள் பொய்யாகிவிடும். சிவன் தென்பாண்டி நாட்டவன் என்று சொல்கிறார்கள். அதை எப்படி நம்புவது..? சிவன் பிறக்காதவன், இறக்காதவன் என்கிறார்கள் இது எப்படிச் சாத்தியமாகும். எல்லாம் வீணான கற்பனை. ஒரு பெண் ஒரு ஆடவருடன் அன்னியோன்னியமாகச் சிரித்துக் கதைத்தால் அவள் அவனுடன் கள்ளத்தொடர்பு வைத்திருக்கிறாள் என்றா அர்த்தம். கதைப்பவன் குடும்ப உறுப்பினனாக இருப்பான். இவையெல்லாவற்றையும் ஆராயக்கூடாது. விதிவழியாகப் பெரியவர்கள் சொன்னதைச் சமூகம் ஏற்றுள்ளது. அதை அப்படியே ஏற்று வாழ்பவன்தான் இன்பமாக வாழ்வான். சிவன் பாண்டிநாட்டவன் அதை உறைவிடமாகக் கொண்டவன். அவன் முத்தியை அருள்பவன் என்று மாணிக்கவாசகர் சொல்கிறார். அதையே அவருக்கு முன் வாழ்ந்த ரிஷிகளும், முனிவர்களும் சொல்கிறார்கள். எனது பேரனார் சொல்வார் ரிஷி மூலமும், நதி மூலமும் ஆராயக்கூடாதென்று. நதி வரும் பாதையை ஆராய்ந்தால் அதில் இருந்து நீரைப் பெற்றுக் குடிக்க முடியாது. தேவையில்லாதவற்றை எண்ணுவதால் துன்பம்தான் மிஞ்சும். நீ கோவில்களுக்குச் சென்று தேவையில்லாதவற்றை எண்ணுவதால் மனம் குழம்புகிறாய். அதனால் உன்னால் செயற்பட முடியவில்லை. இப்போது ஆச்சிரமத்திற்கு வந்துவிட்டாய். சில நாட்களுக்கு எதையும் எண்ணாது சிவனை நம்பு. சிவனை நம்பும் காலத்தில் உனக்கு நல்லவை நடைபெறவில்லையானால் சிவனை நிந்தனை செய். அதை விட்டுவிட்டுச் சிவனை வணங்காமல் இருந்துகொண்டு விமர்சிப்பதால் பயன் எதுவும் உண்டாகமாட்டாது” என்றான் தாமோதரன்.

**119) பக்திசெய் அடியானரப் பரம்பரத்து உய்ப்பவன்**

**120) உத்தரகோச மங்கை ஊர் ஆகவும்**

''என்ன யோசிக்கிறாய். நான் சொல்வதும் பயனில்லாத சொற்கள் என்று நினைக்கிறாயா..? மாணிக்கவாசகர் சிவன் முத்தி கொடுப்பவன். அவன் திருவுத்தரகோசமங்கை என்ற திருத்தலத்தை இருப்பிடமாகக் கொண்டவன். அடியார்களுக்கு அடியவன் என்கிறார். எதையும் மனதால் கணக்கிட்டுச் சொல்ல முடியாது. ஒரு மாங்கனியை ஒருவர் உனக்குத் தந்தால் அது புளிக்கும் பழம். உண்ணமுடியாத பழம் என்று யாராவது சொல்வர்ர்களா…? அப்படிச் சொல்பவன் பைத்தியக்காதரனாக இருப்பான் என்றுதான் கேட்பவர்கள் கருதுவர்ர்கள். அந்தப் பழத்தை வெட்டி உண்டுவிட்டு அதன் சுவையைப் பற்றிச் சொன்னால்தான் கேட்டவர்கள் நம்புவார்கள். ஓர் ஆசிரியர் தனது மாணவர்களுக்கு மதுவிற்கும் இடங்களுக்குச் செல்லக்கூடாது என்று சொன்னார். ஒரு மாணவன் அதைக் கேளாது அங்கு சென்றான். அங்கு வந்த காவல்துறையினர் வயது குறைந்தமையால் அவனைக் கைது செய்தனர். அதன்பின்புதான் அம்மாணவனுக்கு ஆசிரியர் சொன்னது சரியென்றுபட்டது. நீ சிவனை நம்பத் தேவையில்லை. அவரது அற்புதங்களையும் நம்பத் தேவையில்லை. முதலில் தேவையற்ற எண்ணங்களை நீக்கிவிட்டு ஒழுக்கத்துடன் வாழ். அதன் பின் சிவனைப்பற்றி நினை. ஆராயாமல் கதைப்பதும், பயனில்லாத சொற்களைப் பேசுவதும் என்றும் துன்பங்களையே தரும். குடத்தில் உள்ள தண்ணீர் நல்ல தண்ணீராக இருக்குமா என்று நினைத்தால் உனது தாகம் தீராது'' என்றான் தாமோதரன்.

**121) ஆதி மூர்த்திகட்கு அருள் புரிந்தருளிய**

**122) தேவதேவன் திருப்பெயர் ஆகவும்**

தாமோதரனும் சேனாதிராசாவும் கதைத்துக் கொண்டிருந்தபோது, 'நமசிவய, நமசிவய, நமசிவய' என்று பலமாகக் கூறியபடி ஒரு சிவனடியார் ஓடிவந்து சிவனுக்குப் பூப்போட்டு வணங்கினார்.

"ஐயா, இவர் பெரிய சிவயோகி. சொன்னது நடைபெறும். ஆனால் சொல்லமாட்டார். இவர் ஏதாவது சொல்லமாட்டாரா எனப் பலர் இவரின் பின்னால் அலைவார்கள். சிவனின் அருள் இருந்தால் உனக்கு ஏதாவது சொல்வார். பல

வருடங்களுக்கு முன் தீடீரென்று எனது வீட்டுக்கு வந்து, ‘டேய், சிவனை நிந்திக்கிற உனக்கு எப்படியடா பிள்ளை பிறக்கும். சிவனோடு சேர் எல்லாம் நடக்கும். உனது மனைவியும் குடும்பமும் சிவக்குடும்பம். அதனால் வந்தேன், சொன்னேன். திமிர்பிடித்தவனே திமிரைவிடு’ என்றவர் என்றான். ‘அப்போது அவனுக்கருகில் வந்த சிவபோகி சேனாதிராசாவுக்கு அடித்தார். பின்; பேசக்கூடாதவனோடு பேசாதே. அவன் உனது சொல்லைக் கேட்டால் நன்மை அடைவான். போ அவனுக்கருகில் நிற்காதே’ என்று கூறிவிட்டுச் சென்றார்.

“சிவயோகியின் கை எனது உடலில் பட நான் புண்ணியம் செய்திருத்தல் வேண்டும். இனி உன்னோடு நான் கதைக்கக்கூடாது. யோசித்து முடிவெடு” என்று கூறிவிட்டுச் சென்றான் தாமோதரன்.

அப்போது அங்குவந்த சுந்தரமூர்த்தி சுவாமிகள் சொன்னார்; “உனது மனம் போராடுகிறது என்பதைச் சிவன் உணர்ந்துள்ளார். வந்த சிவயோகி வருடத்தில் ஓரிருமுறைதான் வருவார். வந்த இடத்தில் ஏதாவது சொன்னால் அது பலிக்கும். ஐந்தொழில்களையும் செய்யும் மூர்த்திகளுக்கெல்லாம் பலத்தையும், வல்லமையையும் கொடுத்துத் தமது தொழில்களைத் திறம்படச் செய்ய உதவுபவன் சிவன். அதனால்தான் அவனை மகாதேவன் என்கிறார்கள். அவரின் வாக்குக்காக ஆயிரக்கணக்கான மக்கள் காத்திருக்க அவர் உன்னோடு பேசிவிட்டுச் சென்றுள்ளார். சகல வல்லமைகளையும் உடைய மகாதேவனை நம்பு. அவனை ஐந்தெழுத்தால் ஆராதி. நீ நினைத்தது நடைபெறும்” என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

அங்கிருந்தவர்கள் சிவயோகிக்குக் பின்னால் சென்றனர். நேரஞ் செல்லச் செல்ல அடியார்களின் கூட்டம் பெருகியது.

**123) இருள் கடிந்தருளிய இன்ப ஊர்த்தி**

**124) அருளிய பெருமை அருள்மலை ஆகவும்**

சுந்தரமூர்த்தி சுவாமிகள் சொன்னார்; “சேனாதிராசா, சிவயோகியைப் பார். பலமாக வாய்விட்டுச் சிரிக்கிறார் ஏன் தெரியுமா....? துன்புற்றிருப்பவரைச் சிவன் விரும்புவதில்லை. பேரின்பத்தை அள்ளி வழங்க நான் இருக்கும்போது ஏன் உயிர்கள் துன்புற வேண்டும் என்று அவன் நினைக்கிறான். அதனால் துன்பப்படுவோருக்கு ஞானம் உண்டாகாது. மகிழ்வுடன் இருப்பவர்களுக்கு ஞானம்

தானாக வந்து அமைகிறது. காந்தத்தோடு கூடிய இரும்பும் காந்தமாவது போன்று சிவன் நினைவோடு இருப்பவர்கள் இறைவனோடு இருப்பவர்களாவர். பேரானந்தத்தை உடைமையாகக் கொண்ட ஒடுக்கும் சிவன், தன்னை வணங்கும் அடியவர்களுக்கு ஆனந்தத்தைக் கொடுத்து அவர்களது அறியாமையை அகற்றுவார். சிவன் அருளே வடிவெடுத்திருப்பதால் அவன் வீற்றிருக்கும் இடமெங்கும் அருள் மயமாக விளங்குகிறது. அதனால் தான் சிவன் வீற்றிருக்கும் மந்திரமலை அருள் ஒளிபரப்பும் மலையாகத் திகழ்கிறது. அதனால் சிவன் வீற்றிருக்கும் இடங்களுக்குச் செல்வோர் அருளாளராகின்றனர். அப்படியிருந்தும் பல சிவத்தலங்களை வணங்கியும் உனக்கு அருள் வரவில்லையானால் நீ ஒரு கொடிய பாவியாவாய். காதலியைக் கண்ட காதலனைப் போல மனம் குதூகலிக்க வேண்டும். நீ வந்ததில் இருந்து வாட்டமுள்ளவனாகவே காணப்படுகிறாய். அதனால் தான் நீ பல சிவத்தலங்களை வணங்கியபோதும் சிவனின் அருள் கிடைக்கவில்லை. அதை உணர்ந்து ஒரு மனதுடன் சிவனைப் பிரார்த்தனை செய். "மனம் குழம்பிக்கொண்டே இருக்கிறது. அதை ஒருநிலைப்படுத்த முடியவில்லை" என்றான் சேனாதிராசா. "முயன்றால் முடியாதது என்று எவையும் இல்லை. முயற்சி செய்யாது நீ பலனை எதிர்பார்க்கிறாய். அது வெறுங் கையால் முழம் போடுவதைப் போன்றது" என்றார் சுந்தரமூர்த்தி நாயனார்.

**125) எப்பெரும் தன்மையும் எவ் எவர் நிறமும்**

**126) அப்பரிசு அதனால் ஆண்டு கொண்டருளி**

சுவாமியார் சேனாதிராசாவுடன் கதைத்து விட்டும் சென்ற பின்பு தாமோதரன் வந்து சொன்னான்; "எதையும் அவனருளால் தான் பெறுதல் வேண்டும். அவனின் அருள் இருந்தால் தான் அவனை வணங்கவும் முடியும். ஒருவனிடம் அறிவு, ஆற்றல், பெருமைகள், பணம், புகழ் போன்றன வரவேண்டுமானாலும் அது சிவனிடம் இருந்துதான் வருதல் வேண்டும். இன்னும் உன்னை ஏற்கக் கூடிய நிலையில் சிவன் இல்லை. அதற்கும் அவனின் அருள் வேண்டும். மின்சாரத்தில் இருந்து மின்குமிழ் எரிகிறது, மின்மணி ஓசை எழுப்புகிறது. கடிகாரம் ஓடுகிறது. ஆலைகள் இயங்குகின்றன. குளிர் காலத்தில் வெப்பத்தையும், வெப்பமான காலத்தில் குளிரையும் இயந்திரங்கள் மூலம் பெறமுடிகிறது. இப்படி எத்தனையோ கருவிகளை மின்சாரம் இயக்குகிறது. அதுபோல உயிர்களின் செயல்களெல்லாம் இறை அருளால் வெளிப்படுகின்றன. எனக்கும் நல்ல பெற்றோர்களைத் தந்தவன் சிவன். பணத்தைத் தந்தவன் சிவன். புகழைத் தந்தவன் சிவன். அவன் இல்லாவிட்டால் உலகே இயங்காது. எமக்கு எல்லாச் சக்திகளும் உண்டு. அவற்றை வெளிப்படுத்திச் செயலாற்றுபவன்

அவன். அவன் இன்றி ஓர் அணுவும் அசையாது. முதலில் நீ சிவனின் அருளைப்பெறும் வழிகளைப் பின்பற்று. அதனால் அவனது அருள் உனக்குக் கிடைக்கும். அதன்மூலம் உனக்கு வந்து சேர வேண்டியவையெல்லாம் வந்து சேரும்” என்றார் தாமோதரன்.

**127) நாயினேனை நலம் மலி தில்லையுள்**

**128) கோலம் ஆர் தரு பொதுவினில் வருக என**

**129) ஏல என்னை ஈங்கு ஒழிந்தருளி**

**130) அன்று உடன் சென்ற அருள் பெறும் அடியவர்**

**131) ஒன்ற ஒன்ற உடன் கலந்தருளியும்**

“சேனாதிராசாவுக்குச் சுவாமியார் சிவனைப் பற்றி உபதேசித்துக் களைத்து விட்டார். அவனது மரமண்டையில் எதுவும் ஏறவில்லை. அவன் கேட்டான். மாணிக்கவாசகரைச் சிவன் ஆட்கொண்டருளியவன். அவருக்காகச் சிவன் நரியைப் பரியாக்கியவன். அப்படியானவரைச் சிவன் ஏன் தன்னுடன் அழைத்துச் செல்லவில்லை. சிவனடியார்களுடன் கைலாயத்தில் இருந்து திருப்பெருந்துறைக்கு வந்த சிவன் வந்தவர்களை மீண்டும் அழைத்துச் சென்றார். ஏன் அவர் மாணிக்கவாசகரைத் தன்னுடன் அழைத்துச் செல்லவில்லை. இந்தக் கேள்வி பலகாலமாக எனது மனதில் இருந்து அல்லலைத் தருகிறது” என்று கேட்டான் சேனாதிராசா.

“மகனே, பஞ்சபூதங்களால் ஆகிய உடல் பிராகிருதசரீரம் எனப்படுகிறது. ஆனால் அருள் உடம்பானது அப்பிராகிருதசரீரம் எனப்படுகிறது. சிவலோகத்தில் இருக்கும் சிவனடியார்கள் எல்லோரும் அருள் உடலான அப்பிராகிருதசரீரமத்தை உடையவர்கள். அத்தகைய திருக்கூட்டத்துடன் மண்ணுலகிற்கு வந்த சிவன் அத் திருக்கூட்டத்தினை அழைத்துச் சென்றார் மாணிக்கவாசகரைச் சிவன் ஆட்கொண்டமையால் அவரின் சரீரம் அருளாளான உடலான போதும் மாணிக்கவாசகரைக் கொண்டு மண்ணுலகில் நிகழ்த்த வேண்டிய பல கருமங்கள் இருந்தமையால் அவை முற்றுப்பெறும்வரை மாணிக்கவாசகரைச் சிவன் அழைத்துச் செல்லமாட்டார். ஞானிகளையும், ரிஷிகளையும் படைப்பது மக்களின் தேவை கருதியே. அத்தேவை முடிந்ததும் அவர்கள் கைலாயத்திற்குச் செல்வர். அதை மாணிக்கவாசகர் திருவாசகத்தில் இவ்வாறு சொல்கிறார் “திருப்பெருந்துறையில் என்னை ஆட்கொண்ட சிவன் சிவபுரத்திற்கு என்னை அழைத்துச் செல்லவில்லை. மண்ணுலகில் நலனும் அழகும் நிறைந்த சிதம்பரத்தில் தன்னை வந்து சந்திக்கும்படி ஆணையிட்டுவிட்டுச் சென்றார். அருள்மேனி பெற்றுத் தம்மோடு நெருங்கியிருந்த திருக்கூட்டத்தை மட்டும்

தன்னுடன் அவர் அழைத்துச் சென்றார். அவ்வாறு அவர் செய்தது. அவருடைய திருவுளப்பாங்கு ஆகும்'' என்கிறார். கூலிக்கு வேலை செய்வோர் தாம் பொறுப்பேற்ற வேலையைச் செய்த பின்பே புதிதாக வேலையைத் தொடங்குவார்கள். மாணிக்கவாசகருக்கு இன்னும் பல கடமைகள் உண்டு. கடமை முடிந்தால் ஒரு கணமும் அவர் பூவுலகில் தங்கமாட்டார்'' என்றார் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

அன்று மாலை ஆச்சிரமத்துக்கு வந்த கதிரேசன் சேனாதிராசாவை அழைத்துச் சொன்னார்; "அவரவர் அவரவரது கடமையை மட்டுமே செய்தல் வேண்டும். இங்கு பற்றற்றுச் சிவனை வேண்ட வேண்டும். அதுதான் இங்குள்ள சிவனடியார்களது கடமை. அதைச் செய்யமுடியாதவர்கள் வீண்பொழுதைக் கழிக்காது வீடுகளுக்குச் சென்று விடுங்கள்."

**132) எய்தவத் திலாதரர் எரியில் பாயவும்**

கதிரேசன் சேனாதிராசாவுக்குச் சொன்னார்; ''சிவன் அன்புமயமானவன். கருணைக்கடல். அவனை வணங்குவோர் அவனின் ஆளுகைக்கு உட்படுவர். அதனால் அவன் எந்நேரமும் தூங்காது விழித்திருந்து அவனைக் காத்துக் கொண்டே இருப்பான். வணங்காதவனை அவன் வெறுப்பதில்லை. அவன் விரும்பாதவர்களை எதிரிகள் இலகுவாகத் தாக்குவர். அவர்கள் எவ்வேளையிலும் மனக்குழப்பத்தோடு இருப்பர். செய்யும் தொழில் விருத்தியடையாது எதிரிகள் சுலபமாக வெல்வர். சுருக்கமாகச் சொல்லப்போனால் அவனை மனமகிழ்வுடன் வணங்காதவர்கள் தீக்கு இரையாவதற்கு நிகரான துன்பங்களை அடைவர். நீ பெரும் வர்த்தகன். நீ கடையில் இருக்கின்றபோது யாராவது வந்து பொருட்களைக் கொள்வனவு செய்கிறார்களா….? உனது தந்தையும் மனைவியும் இருக்கும்போது தானே பலரும் வருகிறார்கள். இது ஏன் தெரியுமா…? உனது நெஞ்சில் ஈரமில்லை; அன்பில்லை. அதனால் நீ நிற்கும்போது வரத் தயங்குகின்றனர். அன்பான நெஞ்சில்தான் சிவன் குடியிருப்பார். அதனால் அவர்களது உள்ளத்தில் ஓர் பிரகாசம் ஏற்படும். மகிழ்ச்சி தென்படும். நீ அண்மையில் விபத்துக்குள்ளாகி ஒரு மாதம்வரை விடுதியில் தங்கி வைத்தியம் செய்தாய். யாராவது ஒருவர் வந்து உன்னை நலம் விசாரித்தார்களா? இல்லையே. இப்போ உன்னோடு கதைத்த தாமோதரனுக்கு சுகயீனம் ஏற்பட்டபோது ஆச்சிரமத்தில் தங்கி நிற்கும் நாய்கூட அவனை வைத்தியசாலையில் சென்று பார்த்தது. ஏனென்றால் அவன் உயிர்கள் எல்லாவற்றிலும் அன்பு வைத்துள்ளான். உன்னைப்பற்றிய விபரங்களை நேற்று ஆச்சிரமத்திற்கு வந்து உனது தந்தைதான் எனக்குச் சொன்னார். தெருவில் நிற்கும் நாயக்கு ஏன் கல் எறிகிறாய். அது உன்னை என்ன செய்தது. சிவன்

உனக்கு என்ன கெடுதல் செய்தாரென்று அவரை ஏசுகிறாய். விருப்பு வெறுப்பு பற்றற்ற சிவன் உன்னை எதுவும் செய்யமாட்டார். ஆனால் தீய சக்திகள் உன்னை அறியாது உன்னைச் சூழ்ந்து கொள்ளும். அவற்றின் பிடியில் இருந்து நீங்க மேலும் மேலும் தீமையையே செய்வாய். இது மனதில் சிவன் இல்லாததால் ஏற்படும் நிலை. எந்தவிதமான பயனும் இன்றி இங்கு தங்கியிருப்பது பயனில்லாத செயலாகும். அதனால் நீ ஊருக்குப்போ" என்றார் கதிரேசன்.

**133) மால் அது ஆகி மயக்கம் எய்தியும்**

"அருளை நாடாதவர்கள் பழி, பாவம் பார்ப்பதில்லை. அதனால் தீமைகளையே தொடர்ந்து செய்து கொண்டிருப்பார்கள். தீமைகள் நன்மையைக் கொடுக்கும். ஒருவன் திருடினால் அது உடம்பை வருத்தாமல் வரும் பணம். அதனால் ஆசைகள் பெருகும். ஒருமுறை அகப்பட்டால்தான் துன்பத்தின் அருமை தெரியும். அருளோடு வாழ்பவன் சிவனுக்குப் பயந்து தீயசெயல்களைச் செய்யமாட்டான். அதனால் அவனுக்குத் துன்பங்கள் வராது. எமது ஊரில் வரதன் என்றொரு திருடன் இருந்தான். அவன் தென்னந் தோப்புக்குள் நுழைந்து தேங்காய்களைத் திருடுவான். தோட்டங்களில் வாழைக்குலை காய்கறி வகைகளைத் திருடுவான். ஆடு மாடுகளைப் பிடித்துக் கசாப்புக் கடைக்காரருக்கு விற்பான். கடைகளை உடைத்துத் திருடுவான். அவனது நண்பன் கணேசன். இருவருமாகச் சேர்ந்துதான் திருடுவார்கள். கணேசன் நல்லவன். வரதனின் தொல்லைக்காக அவனுடன் சேர்ந்து திருடுவான். அதை அறிந்த கணேசனின் மனைவி திருடுவதால் வரும் கேடுகளைப் பற்றிச் சொல்லி திருட்டை மறப்பதற்காககச் சிவனை வணங்குமாறு கூறுவாள். நாளடைவில் கணேசன் வரதனோடு சேராது விட்டுவிட்டான். ஒரு நாள் வரதன் திருடச் சென்ற சமயம் ஊரில் உள்ள இளைஞர்கள் துணியால் முகத்தை மறைத்துக் கட்டிக் கொண்டு: அவனைப் பிடித்துப் பொல்லுகளால் தாக்கினர். அவனது வலது கை முறிந்து விட்டது. அதனால் அவன் பெருந் துன்பப்பட்டான். அதை அறிந்த கணேசன் எனக்கு வந்து சொன்னான்; "எனது மனைவி எடுத்துச் சொன்னதால் நான் தப்பிவிட்டேன். சிவன் என்னைக் காப்பாற்றி விட்டார். வரதன் ஆறு மாதங்களுக்கு எழும்பி நடக்கமாட்டான்" என்றான். அருளை நாடாதவன் பெருந் துன்பபப்-படுவான். நீயும் அருளில்லாதவன்" என்றார் கதிரேசன்.

**134) பூதலம் அதனில் புரண்டு வீழ்ந்து அலறியும்**

கதிரேசன் சொல்வது சேனாதிராசாவுக்குப் பிடிக்கவில்லை. அவன் சொன்னான்; “உபதேசம் செய்வது எளிது. அதை வாழ்வில் கடைப்பிடிப்பது கஷ்டம். நாம் ஒதுங்கிச் சென்றாலும் பிரச்சனைகள் வந்து விடுகின்றன. இப்போ எனக்கு அட்டமத்துச் சனி நடைபெறுகிறது. அதனால் பல துன்பங்கள் வரும் என்று எனது குடும்ப சோதிடர் சொன்னவர். சனி தான் என்னை ஆட்டிப் படைக்கிறது” என்றான்.

கதிரேசன் கோபப்படாது சொன்னார்; “மகனே மக்களில் பெரும்பான்மையானவர்கள் மூடக் கொள்கையை உடையவராகத் தான் வாழ்கிறார்கள். இவ்வூரில் வாழும் பேராசிரியர் ஒருவர் தனது மகளுக்கு யாரோ பேயை ஏவி விட்டுவிட்டார்கள் என்று கழிப்புக்கள் கழித்தார். பரிகாரங்கள் செய்தார். சில நாட்களின் பின் அவள் தனது காதலனுடன் சென்றுவிட்டாள். அவளுக்குத் திருமணம் பேசி முற்றாகி நாளும் குறிக்கப்பட்டது. காதலித்தவன் வெளிநாட்டில் இருந்தான். அவன் வரும்வரை பேயாட்டம் போட்ட அவள், அவன் வந்ததும் அவனுடன் சென்று விட்டாள். சோதிடம் பொய். சோதிடம் சொல்லி எவையும் நடப்பதில்லை. கிரகங்களுக்கு எதையும் செய்யும் சக்தியும் இல்லை. எல்லா சக்தியுடன், எல்லாவற்றையும் இயக்குபவன் சிவன். சிவனை வணங்குபவர்களுக்குக் கிரகங்களால் எந்தப் பாதிப்பும் வராது. எனக்கு அறுபது வயதில் ஏழரைச்சனி நடைபெற்றது. அதில் எனக்கு மரணமுண்டு என்று சோதிடர்கள் கூறினர். இப்போ எனக்கு எண்பத்தைந்து வயது. ஏழரைச்சனி முடிந்து இருபத்தைந்து ஆண்டுகள் கழிந்து விட்டன. இன்னும் ஐந்து வருடங்களில் நான்காவது ஏழரைச்சனி தொடங்கப் போகிறது. நல்லைநாதனும், மகாலிங்கமும், மகாதேவனும் எண்பது வயதைக் கடந்தவர்கள். அவர்களைச் சனி எதுவும் செய்யவில்லை. மக்களாகப் பிறந்த அனைவரும் ஒவ்வொரு வகையில் துன்பப்படுகின்றனர். துன்பங்பகள் வினைப்படி வருகின்றன. அதைத் சிவனின் துணையுடன் எதிர்த்து நீக்கலாம். பலர் துன்பங்களைக் கை தட்டி அழைத்து தம்மோடு வைத்துத் துன்பப்படுகின்றனர். உனக்குச் சொல்வது எதுவும் விளங்காது. எனது பீட்டனுக்கு வயது மூன்று. நேற்று நெருப்புக் கொள்ளியைத் தூக்கி வந்தான். தகப்பன் பயந்து போனார். “தொடாதை, தொடாதை, என்று சொல்லியும் கேளாது தொட்டு விட்டான். அதுபோலத் தான் நீயும் இருக்கிறாய். சிவனை நினை அவனை வணங்கு. ஐந்தெழுத்தை ஓது என்று பலர் சொல்லியும் கேட்கிறாய் இல்லை. அதனால் வந்த துன்பய்களையும் உணர்கிறாய் இல்லை. அறியாமையால் அவதிப்படுவோரைத் திருத்த முடியாது. எல்லோரும் சொல்வதால் அதில் உண்மை இருக்கலாம் என்று நினைத்தாலாவது உனக்கு விடிவு கிடைக்கும். எல்லோருக்கும் துன்பங்கள் வரும். சிவபக்தர்கள் அவற்றைத்

துன்பம் என்று எடார். அது சிவன் தந்த பிரசாதம் என நினைத்து வாழாவிருப்பர். அதனால் துன்பங்கள் பயந்து அகன்று விடும்"

அதையும் சேனாதிராசா கேட்கவில்லை. ஆகாயத்தைப் பார்த்த வண்ணம் நின்றான்.

**135) கால் விசைத்து ஓடி கடல் புக மண்டி**

**136) நாத நாத என்று அழுது அரற்றி**

**137) பாதம் எய்தினர் பாதம் எய்தவும்**

கதிரேசன் சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்குச் சொன்னார்; "சிலருக்கு எப்படிச் சொன்னாலும் புரிவதில்லை. சேனாதிராசா ஒரளவு படித்தவன். நல்ல குடும்பத்தில் பிறந்தவன். ஆனால் செய்வதெல்லாம் அடாவடித்தனங்கள் தான். அவன் ஊரிலும் பெரும் தீமைகள் செய்வதாக அவனது தந்தை கூறுகிறார். மக்களை நல்வழிப்படுத்த வேண்டும். அவர்களிடம் சிவ நினைவை உண்டாக்க வேண்டும். அவர்கள் தீய செயல்கனைச் செய்வதை நிறுத்தவேண்டும் என்பதே எனது விருப்பமாகும். பக்குவமடையாத ஆன்மாக்கள் தவறான வழியில் போகின்றன. அதனால் உலக வாழ்க்கைகளில் மேலும் மேலும் விழுந்து விழுந்து அழுந்துகின்றனர். துன்பப்பட்டபோதும் ஆசைகளால் உந்தப்பட்டுத் தீமைகளையே செய்கின்றனர். அந்தக் கொடிய துன்பங்களை அனுபவித்த போதும் இறைநினைப்பு ஏனோ வருவதில்லை. துன்பத்தின் எல்லையை அடைந்த பின்பு தான் இறைவனை நினைக்கின்றனர். அதன் பிறகு தான் அவர்களுக்கு நல்வாழ்வு கிடைக்கிறது. மகாலிங்கமும் சிவகுருவும் இவ்வளவு தூரம் மாறுவார்கள் என்று நான் நம்பவே இல்லை. அவன் நேற்றுச் சொன்னான்; "ஐயா இவ்வளவு காலமும் அறியாமையால் பல தீமைகளைச் செய்துவிட்டேன். இப்போ சிவநினைப்பு உண்டான பின்பு பிறப்புக்களைப் பற்றி நினைக்க எனக்குப் பயமாக இருக்கிறது. பிறவிப் பெருங்கடலில் புகாதபடி அதனோடு முரண்டு போராடி, அதிலிருந்து விலகி விரைந்து ஓடி, நாதனே, நாதனே என்று உன்னை நினைத்து அழுது உன்னை அடைந்தவர்களைப் பின்பற்றவே நான் விரும்புகிறேன் என்று மாணிக்கவாசகர் விருமபுவதைப் போல் நானும் விரும்புகிறேன்" என்றான். அவனது மனம் பக்குவமடைந்துவிட்டது. ஆனால் சேனாதிராசாவின் மனம் நாளாக நாளாக மோசமடைகிறது. அவனது மனைவி லட்சுமி தான் பாவம். இவனை நினைத்துத் துன்பப்படுகிறாள்" என்றார் கதிரேசன்.

**138) பதஞ்சலிக்கு அருளிய பரம நாடக என்று**

**139) இதம் சலிப்பு எய்த நின்று ஏங்கினர் ஏங்கவும்**

“மகாலிங்கத்தை நினைக்க எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. இரவு பகலாகக் குடித்துக் கொண்டு திரிந்தவன். அவனது மைத்துனன் ஒருவன் பெரும் சிவபக்தன். அவனுடன் இவன் முரண்பட்டதால் தான் கொல்வித்து உண்ணும் மிருகங்களின் எலும்புகளையும் தோலையும் அவனது வீட்டு வளவு தோட்டம் என்பவற்றில் போடுவான். அதனால் அவன் ஊரை விட்டே போய்விட்டான். அப்படியான மகாலிங்கம் இப்போ சிவபக்தனாகிப் பிறருக்கு உபதேசம் செய்கிறான். நேற்று சிவகுருவுக்கும் அவனது நண்பர்களுக்கும் சொன்னான்; “நண்பர்களே, நாம் ஒன்றாகச் சேர்ந்து பல தீய செயல்களைச் செய்தோம். இப்போ அதை உணர்ந்து முற்றாகத் திருந்தி விட்டோம். நான் திருந்தியமையால் சிவகுருவும் திருந்திவிட்டான். ஒருவர் திருந்தியதைப் பார்த்து மற்றவர்களும் திருந்துவது இயல்பு. அதனால் நீங்களும் திருந்திச் சிவபக்தர்களாகிவிட்டீர்கள். இறைவனை வணங்க வணங்க இறை அருள் பெருகும். நாட்டம் அதிகரிக்கும். அது உங்களில் தெரிகிறது. சிவன் பலரை ஆட்கொண்டவர். அருள் புரிந்தவர். அவர்களது துன்பதுயரங்களை நீக்கியவர். பதஞ்சலி என்ற முனிவர் யோக சாத்திரத்தை இயற்றியவர். அவர் சிதம்பரத்திற்கு வந்து நடராசரது ஆனந்தத் தாண்டவத்தைக் கண்டவர். எம்மால் அப்படிக் காணமுடியாவிட்டாலும் தில்லைக் கூத்தனே என்று அழைத்து நெஞ்சம் உருகினால் சிவன் மேலும் மேலும் உருகும்படி அனுக்கிரகம் செய்வான் என்று மாணிக்கவாசகர் கூறுகிறார். நாமும் அப்படிக் கூறுவோம் என்றான். அதைக்கேட்டு நான் திகைத்துப் போனேன்” என்றார் கதிரேசன்.

**140) எழில்பெறும் இமயத்து இயல்பு உடை அம்பொன்**

**141) பொலிதரு புலியூர்ப் பொதுவினில் தடம் நவில.**

“தொடர்ந்து மகாலிங்கம் தனது நண்பர்களுக்குச் சொன்னான்; “அழகு நிறைந்த இமயமலையின் மேற்பகுதி பொன்மயமாகத் திகழ்வது போல, அழகிய சிதம்பரமும் பொன்னம்பலமாகத் திகழ்வதாக மாணிக்கவாசகர் சொல்கிறார். அதைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கும் சிவகுருவுக்கும் வந்துவிட்டது. சிவன் தான் உலகம் என்று அறிந்தவர்கள், தெரிந்தவர்கள் கூறியபோது நான் அவர்களைக் கண்டபடி ஏசினேன், அடிக்கப் போனேன். இப்போது தான் எனக்கு அதன் உண்மை புரிகிறது. சிதம்பரத்தில் நடனமாடும் நடராசனைத் தரிசிக்க வேண்டும். அவனை ஆசைதீரப் பார்க்க வேண்டும்” என்றபோது கூட்டத்தில் இருந்த சேனாதிராசா, ‘நானும் வருகிறேன்’ என்றபின்

அதைக்கேட்ட மகாலிங்கம் சொன்னான்; "நீ சிவனில் நம்பிக்கை இல்லாதவன். ஆச்சிரமத்தில் இருந்து கொண்டு சுவாமிக்குத் தெரியாமல் குடிக்கிறாய். சிவநிந்தனை செய்வது, குடிப்பது பாவம் தான். ஆனால் புனிதமான இடங்களில் இருந்து குடிப்பதும், தீயசெயல்களைச் செய்வதும் மிகப் பெரிய பாவம். உன்னை எம்முடன் சேர்த்ததே பிழை" என்றபோது சேனாதிராசா, சொன்னான்; "நீ சொன்னதெல்லாம் உண்மை. இன்றிலிருந்து நான் சிவனை நம்புகிறேன். வழிபடுகிறேன்" என்றபோது மகாலிங்கம் சொன்னான்; 'நீ யாருக்கும் தெரியாது என்று செய்பவற்றை சிவன் அறிவான். நீ குடிப்பதை நான் எப்படி அறிந்தேன். அதனால் எல்லோரையும் படைத்த சிவன் அறிய மாட்டானா….? சொல்லிவிட்டுச் செய்யாதே. சொன்னதைச் செய். புண்ணியம் கிடைக்கும்' என்றவன். அது நான் நேரில் கண்ட அதிசயம்" என்றார் கதிரேசன்.

**142) கனி தரு செவ்வாய் உமையொடு காளிக்கு**

**143) அருளிய திருமுகத்து அழகு உறு சிறுநகை**

கதிரேசன் மகிழ்வுடன் சென்று மகாலிங்கத்தைக் கட்டித் தழுவினார். "மகாலிங்கம், இந்தளவு தூரம் மாறுவாயென்று நான் நினைக்கவில்லை. இப்போ ஊருக்கே உபதேசம் செய்யும் தகுதியைச் சிவன் உனக்குத் தந்துவிட்டார். உன்னுடன் சேர்ந்து தீயசெயல்களைச் செய்த உனது நண்பர்களைச் சிவபக்தர்களாக்கியது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. எவ்வேளையிலும் அருளை வழங்கும் சிவனது புன்னகைபூத்த முகம் உன்னை ஆட்கொண்டு விட்டது. குடித்துவிட்டு தீயசெயல்களை நீ செய்தாய். இப்போ திருந்திவிட்டாய். ஆனால் வெள்ளை வேட்டி கட்டி உடலெங்கும் நீறுபூசிப் பொய்வேடமிட்டுச் சமயத்தைக் காட்டிப் பிழைப்பு நடத்துவோரைச் சிவன் திருத்துவான். அவர்கள் திருந்தாவிட்டால் பிறப்புக்கள் எடுத்துத் துன்புறுவர். சிவன் கொவ்வைப்பழம் போன்ற சிவந்த உதடுகளை உடைய உமாதேவியாருக்கும், பயங்கரத் தோற்றத்தையுடைய காளிதேவிக்கும் இரண்டு இயல்பை வழங்கியவன். இருவேறுபட்டவர்களாக இருந்தாலும் அவரவருக்கேற்ற பயனை அவன் அளிப்பான். அதனால் உனது நண்பர்களுக்குப் போதனை செய். அவர்களை ஆச்சிரமத்திற்கு அழைத்து வா. முன்பு இவர்களில் சிலர் போதையுடன் வந்தமையால் தான் நானும் சுவாமியாரும் அவர்களைக் கலைத்தோம். இப்போ உங்களுக்கு அப்போதைய நிலை புரிந்திருக்கும். இனி நீங்கள் தவறு செய்ய மாட்டீர்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு." என்றார் கதிரேசன்.

**144) இறைவன் ஈண்டிய அடியவரோடும்**

**145) பொலிதரு புலியூர்ப் புக்கு இனிது அருளினன்**

**146) ஒலிதரு கைலை உயர் கிழவோனே**

‘‘ஐயா, கைலையும் கைலாயநாதனும் ஒன்று என்பார்கள். அத்தகைய கைலைநாதர் நாதப் பிரமமாக சிதம்பரத்தில் வீற்றிருக்கிறார். ஞானபூமிக்கு நிகராக பூமியில் இருப்பது சிதம்பரம். அதனால் நானும் எனது நண்பர்கள் சிலரும் சிதம்பரத்திற்குச் செல்லப் போகிறோம். அங்கே சிவன் தன் அடியவர்களோடு கூடியிருப்பதாகப் புராணங்கள் சொல்கின்றன. கைலையும், சிதம்பரமும் சிவனின் இருப்பிடங்கள். சிதம்பரத்தைத் தரிசிப்பவர்கள் கைலையையும் அங்கு வீற்றிருக்கும் கைலாயநாதனையும் தரிசிப்பர் என்று அறிந்தேன். அதனால் அங்கு செல்லப் போகிறேன்’’ என்றார் மகாலிங்கம்.

‘‘நல்லது சென்று வா. சிவன் உன்னோடு நீ செல்லுமிடமெல்லாம் வந்து உதவுவார்’’ என்றார் கதிரேசன்.

திருச்சிற்றம்பலம்.